போன் நெ: 15. | விலை 2 அணா | REGD NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 13—6—54 | இதழ் 50

உலர்ந்த சருகே!

உறுமாதே, நீ!!

அவர்கள் முடிவு செய்துவிட்டார்கள், அரைக்ஷணமேனும் அந்நியரின் வாடை இங்கே கூடாதென்று.

விரைவில் அறப்போராம்! ஆரம்பிக்கப்போகின்றனராம்!!

'நாட்டைக் கெடுத்திடும் நயவஞ்சகர்களை விரட்டுவோம்' என்று வீறுகொண்டு எழுந்திருக்கிறார்கள்.

ஒரு அந்நியன்கூட இங்கே இருக்கக்கூடாதாம்!!

இவ்வளவு ஆத்திரம் அலைபுரள்கிறது, இந்துமகாசபைத் தோழர்களுக்கு.

நாட்டின் நாற்புறங்களிலும், வியாபாரம்—நாட்டின் நலம்—ஆலோசனைத்தூதர்—அரசியல் நிபுணர் என்று வலம் வருகிறார்களே, அமெரிக்கரும் பிறரும—அவர்களை விரட்டியோட்டும் வேகம், இந்துமகாசபையினருக்கும் ஏற்பட்டுவிட்டதென்றால், மகிழ்வர் தோழர்கள்! பழைமையும் பாடுகிறதே இன்பகீதம், எனும் ஆனந்தங்கொள்வர்!!

அவசரப்படாதீர் — ஆண்டவனையும் அவனைத் தாங்கியிருக்கும் இந்துமதத்தையும் நம்பியிருக்கும் அவர்கள், 'சில்லரை விஷயத்திலா' சிந்தனையைச் செலுத்துவர்? நாட்டில் வியாபாரக் கொள்ளையடிக்கும் வெள்ளைக்கோமான்கள்மீதோ, சுளைவிழுங்கத் திட்டம் தீட்டும் அமெரிக்கத்துரைமார்மீதோ அல்ல, அவர்களுக்கு ஆத்திரம்—பாதிரிகளமீது! அதுவும், பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி என்று பல காரியங்களைச் செய்கிறார்களே, அந்தப் பாதிரிகள் மீது!!

அவர்கள் இந்துமதத்தின் புனிதத் தன்மையைப் போக்குகிறார்களாம்—ஆகவே, வெளியேறிவிடவேண்டுமாம். வெள்ளைப் பரங்கியரின் விரல் அசைவில் ஆடுமளவுக்கு, முப்பத்து முக்கோடி தேவர்களையும், முக்கண்ணனையும் மூவரையும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீஸ்வரர்களையும் நாரத கிம்புருடர்களையும் வைத்திருக்கும் இந்துமதம் வந்துவிட்டதுபோலும்! என்னே, காலத்தின் கோலம்.! இல்லையெனில், இயேசுவின் ஞானமார்க்கத்தின்மீது இப்படியா கோபம் வரவேண்டும்? அவர்கள், இந்துக்களை, வசீகரமாக மதம் மாற்றிவிடுகிறார்களாம்!—எங்கிருந்து அவர்களுக்குக் கிடைத்தது, இந்த வசீகரம்? — கோடிசூரியப் பிரகாசனான ராமபிரானிருக்கிறார், நம்மிடம்; நீலமேக சியாமளரூபனிருக்கிறார்; கோபியர் கண்டால் மயங்கிடக்கூடிய மன்மதனைப் போன்ற மகாவிஷ்ணு இருக்கிறார். இருந்தும், வசீகரம், இயேசுநாதர் பக்கம் போய்விட்டதாம்! வைதீகபுரியினர் ஓலமிடுகின்றனர்!!

ஒப்பாரி— அழுகுரல் — ஐயோ, எனும் வேதனை — இந்தக் கட்டத்திலேயிருந்துவந்த, இந்துமகாசபையினர், இப்போது அறப்போர் துவக்கப் போகிறார்களாம்! 'ஆங்கிலேயனை வெளியேற்றுவோம்,' என்று பாரதிரச்செய்த பல காங்கிரஸ்காரர்கள், தம்மிடமுள்ளனர் எனும் தைரியம் போலும் — துணிவாகவே, வெளியிட்டிருக்கின்றனர்!!

பூனாவுக்கருகிலிருக்கும் கேட்ஷான் எனுமிடத்திலுள்ள கிருஸ்துவ மதநிலையத்துக்கு கால்நடையாகவே சென்று, 'வெளியேறு! வெளியேறு!' என்று முழக்கமிட்டார்களாம்—கடந்த வாரம். இப்போது, சைகிள் ஊர்வலம் நடத்தி, இந்தக் காரியத்தில் ஈடுபடப்போகிறார்களாம்—பூனாவுக்கு 60 மைல் தொலைவிலிருக்கும், வேய் எனுமிடத்தில்.

இந்த முடிவை, மராட்டிய இந்து மகாசபை அறிவித்திருக்கிறது. மறந்துவிடவேண்டாம், இந்த மகா சபையின் மைந்தர்கள் தான் காந்தி

யாரைச் சுட்டுக்கொன்றவர்கள்! அதேமகாசபை, இன்று ஆக்ரோஷத்தோடு பாய்கிறது—அந்நிய நாட்டுப் பாதிரிகள் மீது. சில தினங்களுக்கு முன். ஐதராபாதத்தில் கூடிய அகில உலக (!) ஆரியன் மாநாட்டினர், இதுபோல ஒருதீர்மானம்செய்ததைத் தோழர்கள் அறிவர். ஆரியர், தீர்மானம்செய்தனர்! மகாசபையினர், தோள் தட்டுகின்றனர்!!

ஆனைமுகத்தானிருக்க, அவன் தம்பி வேலாயுதம் இருக்க, நினைத்தால் ஓடிவரும் சக்கரபாணியிருக்க, விழித்தால் உலகை அழிக்கும் நெற்றிக்கண்ணன் இருக்க, மங்களகரமான காமாட்சியும், மாரியம்மனும், காளியாத்தாளும் கருப்பண்ணனும், மூலைக்கு மூலை, வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு இருக்க அவைகளையெல்லாம் தாண்டி, ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து வந்த இயேசுவின் எண்ணங்கள் மக்களை வசிகரித்து விடுகிறதாம்! 'ஆபத்து—ஆபத்து' என்று மார்தட்டுகிறார்கள், இந்த மார்க்க பூபதிகள்!!

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தமூர்த்தியாகி அருள் வழங்கும் எம்பிரானின் இருதயக் கமலத்தினின்று எழுந்ததன்றோ, எமது மதம்?—என, கனிவும், குழைவும் நிரம்பக் கூறுகின்றனர். நாள் தோறும் மைலாப்பூரிலும், மாம்பலத்திலும், அன்றாடம் நடைபெறும் அப்படிப்பட்ட 'பிரசங்கங்களின்' பட்டியலை, 'இந்து' ஏடு, தந்தபடி இருக்கிறது! எனினும், இயேசுவின் சீடர்கள், வசிகரிக்கிறார்களாம்— வரிந்து கட்டிக்கொண்டு புறப்படுகிறார்கள். இடிந்துபோன சோமநாதர் ஆலயத்தை புதிதாகக் கட்டினார், பட்டேல்! புனிதமார்க்கம் தழைக்கப் புத்தகங்கள் போடுகிறேன் என்கிறார், முன்ஷி! அமெரிக்கா வரையிலே, இந்து மதத்தின் பெருமை அடிபடுகிறது என்கிறார், சச்சிதேவாத்தமர்! 'இதிகாசம்—புராணம்—இவைகளெல்லாம் படிக்கும் ஆசை அந்நியாளுக்கு அதிகமாயிண்டே வர்ரது...', என்கிறார், அனந்தசயனம். சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனித் திருமஞ்சனம், ஆடிப் பூரம், ஆவணி அவிட்டம், புரட்டாசிசனி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகைதீபம், மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம், பங்குனிஉத்திரம், என்று ஊர்தோறும் மாதந்தோறும் உற்சவாதிகள் குறையவில்லை — கிழமைதோறும் அனுஷ்டிக்கும் விரதங்களும் குறையவில்லை—எனினும் வசிகரம். இயேசுநாதரின் சீடர்களிடம் போய்விட்டதாம்! சினத்தோடு செப்புகின்றனர், இந்துமகாசபையினர்!.

பள்ளிக்கூடம்! ஆஸ்பத்திரி!!—என்று கட்டி, வசீகரம் செய்கிறார்களாம், கிருஸ்துவப் பாதிரிகள். செச்சே! செய்யலாமா, அவர்கள்!! எங்கிருந்தோ, கொண்டுவந்த பணத்தை. 'இந்தாப்பா! ஏற்படுத்து, நூறு பஜனைக்கூடங்களை. இடிந்துபோய்விட்டதா, ஈசுவரன் கோயில் — கட்டி முடி, அதை! வேதபாராயண முழக்கம் குறைந்துவிட்டதா—இந்தா, காசு!'' என்று தாராமல், கேவலம், பள்ளிக்கூடங்களும், ஆஸ்பத்திரிகளும் கட்டுகிறார்களாம. அவ்விதம் கட்டித்தந்து, ஜனங்களை, வசிகரிக்கிறார்களாம்!!

அதனை ஒழிக்க அறப்போராம்—வைதீகப்படை, பாயுமாம் — அவர்களையெல்லாம், ஓட்டைவிட்டு ஓட்டிவிட்டுத்தான், வேறுவேலை பார்க்குமாம்!!

இருபதாம் நூற்றாண்டில், இப்படியோர் கட்சி — அதற்கும் சில பேர் — அதனை அனுமதிக்கவும், ஒரு அரசாங்கம்.

பாதிரிகளின் பணிகண்டு பதறிடும், இவர்களைக் கேட்கிறோம்—"இன்று, ஏற்படுகிறதே, இவ்வளவு வீரமும், கோபமும்? அன்று எங்கே போயிற்று! ஆயிரமாயிரவர், கிருஸ்துவர்களாகவும், முஸ்லீம்களாகவும் மாறினரே, ஏன்? எண்ணினீரா! உமது அட்டகாசமும், அட்டூழியமும தாங்கமுடியாமல் தானே: சித்தார்த்தர் புத்தரானார்—மகாவீரர் புறப்பட்டார்—குருநானக், எழும்பினார்—கோடிக்கணக்கான மக்கள் வேறுபாதை புகுந்தனர். அந்தக் கொடுமைகளில கொஞ்சமாவது, குறைந்திருக்கிறதா, இன்று! இந்துவென்பதால், கீழ்சாதிமகனாய், கலப்பையும் சேறுமே கதியெனக்கிடக்கிறான் உழவன்—தர்ப்பையும், மணியுமே போதுமெனக்கிடக்கிறான், ஐயர். இந்த அடிப்படை! இன்றுவரை மாறியதுண்டா! இன்று, முஸ்லீம் என்றால், சீறுகிறாய் — கிருஸ்துவர் என்றால பாய்கிறாயே—அன்று, இயேசுவின் பக்கமும் அல்லாவை நாடியும் சென்ற அவர்கள் எல்லாம், யார்? பாலஸ்தீனத்திலிருந்து வந்தவர்களா! அரேபியாவிலிருந்து குடியேறினவர்களா!! அல்ல, அல்ல, உன் கொடுமை தாங்கமாட்டாது ஓடியவர்கள். விளக்கம்வேண்டுமா? இதோ கேள்! இக்பால்—சாதாரண மனவரலை; எழுச்சிக் கவி – முஸ்லீம் உலகில் பச்சைக்கொடி பறந்தாட வீரஉணர்ச்சியூட்டிய வெற்றிக் கவி. அவர் கூறுகிறார்:

'என்னைப் பாருங்கள்,
ரூம் தப்ரீஸ் ஆகிய ஞானவழியில்
இத்தகைய தேர்ச்சிபெற்ற
பிராமண மரபினனை,
இந்தியாவில் நீங்கள் என்றும்
காணமுடியாது''

பாலசுந்தரம்

S பாலசுந்தரம்—நீண்ட நாள் சுயமரியாதைக்காரர் மட்டுமல்ல திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினரும் ஆவார். இவர், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மானும்பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்; சென்னை நுங்கம்பாக்கத்தில், 'மானும்பதி டிரேடிங் கம்பெனி' என்றபெயரால் ஒரு தனிக் கடைவைத்து குன்றாத முயற்சியால் வாணிபத்தை வளமபெறச் செய்தவர். முற்போக்குக் கருத்தும், சீர்திருத்த எண்ணங்களும் கொண்ட இவர், தம் மக்களையும அப்பாதையிலேயே பழக்கி வைத்தார். அப்படிப்பட்ட ஒரு சிறந்த கொள்கை வீரர் 7—5—54-ல நம்மை விட்டுப் பிரிந்தது தாங்க முடியாத துயர் தருவதாகும் அன்னாரின் குடும்பத்தாருக்கு நம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம.

தந்தை விட்டுசசென்ற கைத்தறி வாணிபத்தையும், பொதுப்பணிகளையும், தனயர்கள் தளராது செய்வதே அவர்கள் அன்னாருக்குக் காட்டும் மரியாதையாகும்.

பஞ்சாபில் வசித்த அவரது மூப்பாட்டன், முஸ்லீம் — ஆனவராம்! அவருடைய கவிதைகளில் அடிக்கடி சுட்டிக்காட்டுகிறார். அவர் என்ன! பத்துகோடியாகி, பக்கத்தில் தனி நாடாக அமைந்துவிட்ட, மக்கள் எல்லாம், எங்கிருந்து வந்தவர்கள்? நீ வெட்டிய படுகுழியில் சிக்கிச் சிதைந்து, புதுஒளி கண்டு ஓடியவர்கள்தானே! மாதாகோவில் நாடி வலம் வரும் இலட்சோபலட்சம் மக்கள், உன் தொல்லை தாங்கமாட்டாது உதறிச் சென்றவர்கள்தானே! அன்று இருந்த நிலையில் இம்மியளவும் மாறவில்லை, நீ—'ஏடா! போடா!' என்று கீழ்சாதியினரை விரட்டவும் தயங்கவில்லை—வேட்டு முழக்கத்துக்கும், வெண் பொங்கலுக்கும், வீண் அபிஷேகங்களுக்கும், அகப்படும் காசைச் சுருட்டவேண்டுமென்ற சூதுமதியை இன்னும் இழக்கவில்லை, நீ. ஆனால், தோள் தட்டுகிறாய்!—பள்ளிக்கூடமும் மருத்துவச்சாலையும் வைத்துத் தரும் பாதிரிகள்மீது. அவர்கள் அவ்வண்ணம் செய்வது, கசக்கிறதா உனக்கு? அந்தக் கசப்பினால் கர்ஜிக்கிறாயே, பலன் காணமுடியுமா உன்னால்! உன்வலையில் சிக்கிக்கிடந்த அருந்சான் இயேசுவின் முத்திரை ஏந்தி, ஆரோக்யசாமி ஆனதால் — அதோ ஆனந்தமாகப் பவனி வருகிறான். வீண் சொல்லில்லை! கால விரயமும் இல்லை! நீ புதிய புதிதாகக் கோயில்களைக் கட்டுகிறாய்—கூட்டமோ, பாதிரிகளின் ஆஸ்பத்திரிக்குப் போய்க்கொண்டிருக்கிறது. அதைப் பார்த்து வயிறெரிகிறாயே, வாய்ச் சொல்லேன். தீராத வினையெல்லாம் தீர்த்துவைக்கும் தெய்வங்களை! லோகத்துக்கே குரு சங்கராச்சாரியார் இருக்கிறார் — அகோபிலமடம் இருக்கிறது — சிருங்கேரி ஜாகீர் இருக்கிறது — தர்மபுரம் உண்டு— திருவாவடுதுறை இருக்கிறது— இந்தத் தெய்வத் தூதர்களிடத் திருப்பச் சொல்லலாமே, திசை கெட்டுச் செல்வோரை? ஏது நேரம் உனக்கு! வரவேண்டிய நெல் வந்ததா, சன்னிதானத்தின் சாப்பாட்டில் தங்க பஸ்பம் இருந்ததா, ஜாகீரை எடுக்க சர்க்கார் சட்டம் போடுகிறதே என்ற சங்கடங்களைச் சமாளிக்கவே பொழுது போதவில்லை. இந்நிலையில் மக்களை நினைக்க ஏது நேரம்? 'மார்க்கம், வாழ்வை வளமாக்கும் வழி' என்று கருதும் நீ, வரிந்து கட்டிக்கொண்டு போயா இயேசுவின் சீடர்களை இங்கிருந்து விரட்டிவிடப் போகிறாய்! வேதனையான வேலை—உன்னால் முடியாத வேலை—உலர்ந்த சருகு நீ! ஓட்டமுடியாது, இனியில்!! வீண் ஆவேசம் வேண்டாம்—வேதனைதான் மிஞ்சும். அறப்போர் தொடுக்கிறாயாமே. அறப்போர்! அதற்கெனச் செலவழிக்கும் சிந்தனையையும் பணத்தையும், அவர்களைப்போன்ற காரியங்களில் பயன்படுத்தேன் பார்க்கலாம். மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, நாகை நீலாயதாக்ஷி, திருவரங்கத்தான், சிதம்பரம் நடராஜர், ஆரூர் தியாகராஜர் என்று நூற்றுக்கணக்கான கடவுளர்வசம், கோடிக்கணக்கான செல்வம் கிடக்கிறதே — கொண்டு வா, வெளியில்! அதை விடுத்து, அவர்கள்மீது பாயப்போகிறாயே — எங்கிருந்து பிறந்தது, இந்தத் தைரியம்? தத்திக் குதிக்கும் உன்னைப் பார்த்தால், பரிதாபமாக இருக்கிறது! ஏ, இந்துமதவாதியே—இறைவன் பெயரால் நாலந் தள்ளிவரும் சுயநலவாதியே!—ஆத்திரப்படாதே—அறிவுக்கு வேலை கொடு" என்ற எச்சரிக்கையுடன், என்றோ ஓர்நாள் உன் கூடாரத்திலிருந்து, பிறகு மாற்றுக் கூடாரம் சென்ற மகாகவி இக்பால், சுதந்திர உணர்ச்சியுடன் சொன்ன வார்த்தைகளை நினைவூட்டுகிறேன்— ஒரு காலத்தில், அவருடைய மூதாதையரும் அசல் பிராமணர்களாயிருந்தனர் என்பதைக் கேட்டால், உன் முகம் சிறிது திரும்பும் என்ற எண்ணத்தால். அந்தக் கவி விடுத்த எச்சரிக்கை இது — ஏந்திக்கொள், நினைவில்:

ஏ, சிந்தையற்றவனே,
இந்நாட்டை எண்ணிப்பார்!
துயரம் வளர்கிறது
நடப்பதையும், நடக்கவிருப்பதையும் பார்!
பழங்கதைகளில் என்னஇருக்கிறது?
இதை உணராவிட்டால் நீங்கள் அழிந்துபடுவீர்கள்.
உலக சரித்திரத்தில் உங்கள்
அடிச்சுவடும் இன்றிப்போம்!

•

பூங்காவின் வாழ்க்கை
இழிவான தேன்னில்
அதையாரே விரும்புவர்'
இதை நீங்கள் அறிந்தால்,
விடுதலையின் இரகசியம்
அன்பு என்பதையும்,
ஒருவரை ஒருவர் பிரித்துப்பார்த்ததாலேயே
அடிமைத்தனம் உண்டாகிறதென்பதையும்
உணர்வீர்கள்

•

நீங்கள்,
இத்தோட்டத்தைக் கண்காணிப்பவர்கள்
எனவே இதன் பிளவு ஒழிய
வழிகாணுங்கள்.
அப்பிளவெனும் பேய்க்காற்று
செடிகளைப் பாழாக்கிவிட்டது.

★

திருமணம்

ராணிப்பேட்டைக்கடுத்த பிஞ்சிகிராமத்தில் 6—6—54 ஞாயிறன்று காலை செல் கே. [illegible] லர் தலைமையில் தா. வெங்கடேசனுக்கும் இ. கோவிந்தம்மாளுக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது. இராம. அரங்கண்ணல் சி. வரதராசன் காஞ்சி சம்பந்தம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நாட்டின் நாயகர்கள்

(சிறிய சீரிய அரசியல் ஏடு)

சி. என். அண்ணதுரை தீட்டியது

காங்கிரசாட்சியின் போக்கை விளக்கிடும் கருத்தேடு

வேலூரில் ஜூன் 19. 20-ல் நடைபெறும் வடார்க்காடு மாவட்ட மாநாட்டிலே கிடைக்கும்.

5. சிந்தனைச் சுழலிலே!

மாடியிலிருந்து இறங்கி வரும் பிள்ளையைக் கண்டதும் பயபக்தியோடு எழுந்துநின்றான் ஆறுமுகம். அறுபது வயதுக்கு மேலிருக்கக்கூடிய அவர் மல்ஜிப்பாவுடன் தங்க செயின், வைரமோதிரங்கள் மூக்குக் கண்ணாடி இவைகளுடன் காட்சி அளித்தார்.

பிள்ளை வருவதைக் கண்டவுடன் மானேஜர் சாம்பசிவம் எழுந்து ஓடி வந்தார். பிள்ளை ஹாலில் நுழைந்து சோபாவில் அமர்ந்தார். அவர் பின்னால் நின்றுகொண்டு ஆங்கிலத்தில் ஏதோ கூறினார். பிறகு ஆறுமுகத்தைக் கூப்பிட்டார். திடுக்கிட்டு, நடுக்கத்துடன் உள்ளே நுழைந்தான் ஆறுமுகம்.

"இவன்தானுங்க நம்ப காருக்கு புது டிரைவருங்க. இங்கே தோட்ட வேலை செய்துகொண்டிருந்த மாரி மகனுங்க. அதிகமா வெளியிலே பழகினதில்லை. இதற்கு முன்னாலும் எங்கும் வேலை பார்த்ததில்லை." என்று ஆறுமுகத்தைப்பற்றி கூறினார் மானேஜர்.

உத்தமநாதப்பிள்ளை ஆறுமுகத்தை ஒரு தடவை தலையிலிருந்து கால்வரைப் பார்த்தார்.

"உன் பேரென்ன?"

"ஆறுமுகம்!"

"ஹூம்!" என்று கூறிவிட்டு பேப்பரை எடுத்தார் பிள்ளை. மானேஜர் ஆறுமுகத்திற்கு கை காட்டினார்.

ஆறுமுகம் உடனே மறுபடியும் வராந்தாவில் வந்து நின்றுகொண்டான். பெரிய முதலாளியின் சந்திப்பு வெகு சுருக்கமாக முடிந்தது.

சில நிமிடங்களில் மறுபடியும் மாடிப்படிகளில் சப்தம் கேட்டது. கையில் ஒரு கட்டுப் புத்தகங்களுடன் இறங்கி வந்துகொண்டிருந்தாள் புஷ்பா.

"அப்பா! இப்பவே உங்களுக்கு காரு வேணுமா?"

"ஏனம்மா... ......எனக்கு இப்பொழுது தேவையில்லை. மாலைதான் தேவைப்படும்!"

"இல்லை.........காலேஜிலிருந்து நாலைந்து பெண்கள் மத்தியானம் அடையாறு கலாக்ஷேத்திரம்போக உத்தேசம். அதனால்தான்......" என்று இழுத்தாள் புஷ்பா. பிள்ளை நிமிர்ந்துபுஷ்பாவைப்பார்த்துப் புன்முறுவல் செய்தார்.

"போயிட்டு பொழுதோடு வீட்டிற்கு வந்துடு அம்மா!"

"சரி, அப்பா!" என்று துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடிப் போய் காரில் ஏறினாள் புஷ்பா. ஆறுமுகம் ஒதுங்கி நின்று தன் ஸீட்டில் ஏறி உட்கார்ந்து கார் சாவியை மாட்டினான்.

எங்கு போவது என்பதைப்பற்றி அவள் எதுவும் கூறவில்லை.

பரவாயில்லை என்று காரை ஓட்ட ஆரம்பித்தான். பங்களாவைத் தாண்டி மெயின் ரோடுக்கு வந்தான். அப்பொழுதும் புஷ்பா வாய் திறக்கவில்லை. கடைத் தெருவைத் தாண்டியது, கார். ஆறுமுகத்தின் எஜமானியும் பேச ஆரம்பித்தாள்.

"உன் பெயரென்ன, டிரைவர்?"

அவள் குரல் சாந்தமாகவே இருந்தது.

"ஆறுமுகம், அம்மா!"

"எனக்காகக் கார் ஓட்டும்போது நான் சொல்வதை தவறாமல் செய்கிறாயா, ஆறுமுகம்!"

ஆறுமுகம் திடுக்கிட்டான். பாஸ்கர் அவனை அதிகாரம் செய்தவிதம் அவனை மனிதஜாதியில் சேர்க்காத நிலையிலிருந்தது. ஆனால் புஷ்பா பேசுவதோ செங்கமலம் பணக்கார வீட்டுப் பெண்ணானால் எப்படி பேசுவாளோ அப்படி இருந்தது.

"என்ன செய்ய வேணும், அம்மா?" என்றான் அவள் நடத்தையில் திருப்தியடைந்த நிலையில்.

"என்கூட வரும்போது, நான் எங்கே போகிறேன், யார்கூட பேசுகிறேன், யார்கூட தங்குகிறேன் என்பதையெல்லாம் வெளியில யாரிடமும் கூறக்கூடாது. ஆமாம்! இந்த விஷயத்தில் நீ கொஞ்சமும் தவறக்கூடாது. தெரியுமா?"

"தெரியுது, அம்மா. இதைப்பற்றி முன்பே மானேஜர் கூறியிருக்கிறார்."

"அதுதானே சொல்லவந்தேன். மானேஜர் கேட்டால்கூட நான் போகுமிடத்தையும், பழகும் நண்பர்களையும்பற்றி ஒரு வார்த்தை கூடக் கூறக் கூடாது!"

"புரிஞ்சுதுங்க......"

"சரி, அதோ அந்த பஸ் ஸ்டாப் அருகில் நிறுத்து"

ஆறுமுகம் பாஸ்கருக்காக கார் ஓட்டி வரும்பொழுது அதே பஸ் ஸ்டாப்பில்தான் நிறுத்தி, சீனுவை ஏற்றிக்கொண்டான். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அதே இடத்தில் காரை நிறுத்தினான். ஆனால், இந்த தடவை காரில் ஏறியது சீனு

(13-ம் பக்கம் பார்க்க)

தங்கக் கூண்டு! கிளி, உள்ளே!!

"தேனும் தினை மாவும் பிசைந்து வைக்கிறேன்! சிறகுகளுக்கு வர்ணம் இட்டுள்ளேன்! அமர்ந்து கொள்ள அழகான வெள்ளிக் கம்பி! கூண்டோ தங்கம்!", என்று பாடிப் பறக்கும் பைங்கிளியைக் கூண்டிலே போட்டு அடைத்து விட்டு, அதற்குச் செய்திடும் அருமை உபசாரங்களைப்பற்றி அழகுபட வர்ணித்தால் பயனுண்டோ! கிளி, தவிக்குமே ஒழிய கீதம் பாடியவண்ணம் இருக்குமோ? பச்சை மரமும், இச்சைக்கினிய ஜோடியும், கனிச்சோலையும் அதன் கவனத்திலிருக்குமன்றி, தேனும் தினைமாவும் ருசிக்குமா? செய்திடும் வர்ண வேலைகளை ரசிக்குமா? தங்கக் கூண்டு—வெள்ளிக்கம்பி என்பதால், அகமகிழ்ந்து ஆடி ஓடுமா? அதனை மறந்தவண்ணம் ஆர்ப்பரிக்கின்றனர் நமது அகில இந்தியத் தலைவர்கள். ஐந்தாண்டுத் திட்டமாம்! அதில் மூன்றாண்டு முடிந்துவிட்டதாம்!! அடுத்த ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டுவிட்டதாம்—அதைப் பற்றி ஆராய்ச்சிகள் நடத்துகிறாராம், திட்டக் கமிஷன் தலைவர் வி. டி. கிருஷ்ணமாச்சாரி — அதன் மூலம் எதிர்பார்க்கும் நன்மைகள் ஏராளமாம்—அனுதினமும் அங்கிங்கெனாதபடி எங்கும் இதே பேச்சாக இருக்கிறது! இத் திட்டத்துக்கு தன்னுடைய மேலான அறிவைக் கொண்டு, அனுபவ சாத்யமான முறைகளை ஆராய்வதற்காக, அன்பர் தேஷ்முக், தனது அருமைத் துணைவியுடன், நாடு முழுமையும் பயணம் வரக் கிளம்பியிருக்கிறார்!! நாள்தோறும் இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள்பற்றி. பண்டித நேரு பேசாத இடமில்லை — கூறாத வார்த்தையில்லை. பாலும் தேனும் வழிந்தோடும் என்றார்களே முன்பு! அதுபோல, இன்று செல்வமும் வளமும் பூத்துக் குலுங்கும் என்று முழக்குகிறார்கள்!! அன்பர் தேஷ்முக், கர்னூலில் அளிக்கப்பட்ட பாராட்டுரைக்குப் . பதிலளிக்கும் போது கூறினாராம், "இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில், தேசிய வருமானம் கணிசமான அளவுக்கு உயர்ந்துவிடும். இன்றுள்ள நிலைமையைவிட மக்கள் நன்றாக வாழ்வார்கள்" என்பதாக. அமைச்சரின் ஆசை, வரவேற்கத் தக்கதே! ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் ஏழ்மையும் பசியும் நீங்கி, இல்லாதோரின் குறைகள் அடங்குவதை வரவேற்க மறுப்போர் இரார்! வறுமைத் தேளும், வாழ்க்கைச் சூறாவளியும் அலைக்கழிக்க அல்லாடும் ஏழைமகன், இன்பத்தைத் தேடி அலைகிறான் — அந்த இன்பம், இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின்மூலம் கிடைக்கும் என்றால் மகிழவே செய்வர்! மனதில் புதுத் தெம்பு பெறுவர்!! ஆனால், நிலைமை என்ன? தேசிய வருமானம் உயருமாம்—தேஷ்முக் செப்புகிறார்! எந்த வகையில்? அதோ மாடி வீட்டிலிருக்கிறானே அவனுடைய வருமானமா—அல்லது குடிசைக்குள்ளே கும்பி கொதிக்க வாடுகிறானே அவனுடைய வருமானமா? பாலுக்கு அதிக சர்க்கரையா? கூழுக்கு உப்பா? தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், அமைச்சர் ஆர்வத்துடன் கூறுகிறார் — தேசிய வருமானம் அதிகரிக்குமென்று. அந்த ஆர்வத்தில், ஏழையின் குடிசையில் குமுறல் அடங்கும் என்கிற ஆசை தென்படுகிறது. இந்த ஆசை, மலருமா—கருகுமா, இதனையே சிந்திக்க விரும்புகிறோம், நாம் அதனாலேயே தங்கக்கூண்டிலே அடைபட்ட கிளியைக் கவனப்படுத்துகிறோம்.

*

அதோ, பாரீர்! அணைக்கட்டுகளை

தண்ணீரைக் கொட்டும் குழாய்களைக் காணீர்!

கதிர்கள் சாய்ந்து ஆடுவதைப் பாரீர்!

அதிக உற்பத்தி—உணவுக்கு கஷ்டம் இல்லை.

இவ்வண்ணம் கூறி, ஆனந்தப்படுகின்றனர்! உண்மையில், இது, அகமகிழ்ச்சிக்குரிய விஷயமே. பாலைவனம் சோலைவனமாக காட்சியளித்தால், கண்டு மனமகிழவே செய்வர், எவரும். காடும் கரம்பும் கழனியாவதும், ஆலைகள் உருள்வதும், ஆங்காங்கும் புதிய பாதைகள் போடப்படுவதும், அணைக்கட்டுகள் பல உண்டாவதும், நாடு, சோலையாவதையே குறிக்கும். இதனை, யார் செய்தாலும், மக்கள் மனமகிழவே செய்வர்! இந்த மகிழ்ச்சி மலர வேண்டுமென்பதற்காகத்தான், அரசு பீடத்திலிருப்போர், திட்டங்களைத் தீட்டுகிறார்கள். தீட்டுகிற ஆசையையும், அத்திட்டம் தருகிற பயன்களையும் கண்டு, நாம் மனம் வெதும்பவில்லை. ஆனால், அவ்வண்ணம் கழனியில் விளைந்த கதிரைக் காட்டும்போது, 'அக்கழனி யாவும் என்னுடையது' எனக் கூறும் நிலப்பிரபுவும், 'கழனியில் கதிர் ஆடுகிறது! என் வயிற்றுக்குடலும், அதைப்போல, பசியால் ஆடத்தான் செய்கிறது!!' என்று கண்ணீர் சிந்தும் ஏழை விவசாயியும், இருந்தால், திட்டம் பல தீட்டியென்ன! காடு, நாடாகிப் பயன் என்ன!! இந்தக் கேள்வியையே, தேசிய வருமானம் உயரும் எனச்செப்பும், தேஷ்முக் வட்டாரத்தைக் கேட்கிறோம், நாம். ஆலைகள் பல, துவக்கப்படுகின்றன — அங்கிருந்துபோகும் புகை, வானமண்டலத்தையே வளைக்கிறது—பார்க்கக் கண்கொள்ளாக் காட்சிதான் — ஆலையின் மாளிகையில் அழகான மூவர்ணக்கொடியும் கம்பீரமாகப் பறக்கிறது! ஆனால், ஆலையின் கதவுகள் திறக்கப்பட்டதும், மெருகுகுலையாத காரில் செல்லுகிறாரே ஆலையூரார்—அவரையும், அவருக்குப்பின் வியர்வை சிந்தியதால் கருகிக் காய்ந்து சக்கையாய் வரும் பாட்டாளிகளையும் காணும் போது, என்ன தோன்றும்? அரசாங்கம், ஆனந்தகீதம், பாடலாம்— கடந்த ஆண்டைவிட இந்த வருஷம் என்னுடைய நாட்டில் ஏராளமான ஆலைகள் இருக்கின்றன, என்று.

ஆனால், அந்த ஆலைகளை வாழச் செய்யும் ஏழை உழைப்பாளியின் கதி என்ன? இரவுவந்தால், கண்ணீர்! விடிந்தால் வேதனை!! வேறென்ன, காணமுடியும்? இரத்த நிலையில்லை, தேசிய வருமானம் உயருமாம்! தேனும் பாலும் வழிந்தோடுமாம்!! தங்கக்கூண்டு. கிளி, உள்ளே.

திருமண விழா

13—6—54-ஞாயிறு காலை 7½-மணிக்கு கரடிகுளம் (ஜயங்கொண்டம்) மணமகள் இல்லில் மறைந்த வீரர் உடையார்பாளையம் வேலாயுதம் அவர்கள் மகள் வே. மங்கையர்க்கரசி, திரு. க. நடேச படையாட்சி அவர்கள் மகன் க. ந. இராமச்சந்திரன் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெறும். தோழர் கே. ஆர். விசுவநாதம் M. L. A. தலைமைவகிப்பார். தோழர்கள் அண்ணாதுரை, டி. பி. வேதாசலம், மு. கருணாநிதி, ப. பூவராகசாமி M. P. ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள்.

*

'ஐந்தாண்டுத் திட்டம்' போட்டு அதன்மூலம் நாட்டின் வாழ்வில் புதுமலர்ச்சி பூக்கச் செய்யவேண்டுமென்கிற ஆசை, புதியதல்ல—பண்டிதர்கூறும் கண்டுபிடித்த விஷயமுமல்ல. புரட்சிக்குப்பின் பூத்த ரஷ்யாவிலேதான் முதன் முதலில் ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டது. அதன்படி பல காரியங்களும் நிறைவேற்றப்பட்டன. ஆனால், அங்கு, கிளி கூண்டிலே இல்லை. அதுபோன்ற அரசியலமைப்பை அவர்கள் வகுத்துக்கொண்டார்கள். தேசிய வருமானம் என்பது, ஆலைகளும் கழனிகளும் உற்பத்திசெய்து குவிக்கிற பொருள்கள் மட்டுமல்ல! அதனைச் செய்து தரும் உழைப்பாளியின் சக்தியும் சேர்ந்தது!! அவனுடைய உழைப்பைக் குறைத்து, எவ்வளவு அதிகமாக ஊதியம் தரவேண்டுமோ, அதனைச் செய்ய வேண்டும் — ஆலையரசரின் மாடி வீடு அழகாக உயர்வது அல்ல தேசமுன்னேற்றம்! ஆலை உழைப்பாளியின் அடிவயிற்றுப் புயல் அடக்கப்படுவது!! என்னுடைய நாட்டில் இவ்வளவு ஆலைகள் இருக்கின்றன என்று பெருமை பேசுவதல்ல தேசமுன்னேற்றம்; அவைகளில் உற்பத்தியாகும் பொருள்களை அனைவரும் அனுபவிக்கிறார்கள் என்பது! தேசிய வருமானம்—பாங்கிகளின் பட்டியலிலும், முதலாளிகளின் கூட்டத்திலும் சர்க்காருக்குக் கிடைக்கும் வரியிலும் இல்லை; மக்கள் மனத்திடம் இருப்பது—மக்களுக்குச் சொந்தமானது என்கிற புது உண்மையை அவர்கள் பரப்பினார்கள். அதனால், அணைக்கட்டு எங்கு கட்டப்பட்டாலும் அகமகிழ்ந்தான், ரஷ்ய மகன். புது ஆலை அமைகிறதென்றால், பூரிப்புத் தோன்றியது அவனுக்கு. கழனியில் விளையும் கதிர்கள், களிப்பைத் தந்தன. உள்ளத்தில், உழைப்பும் ஐந்தாண்டுத் திட்டமும் — உயர்ப்பர்களுக்கல்ல; தனக்கு என்கிற நம்பிக்கை ஏற்பட்டது அவனுக்கு. அதனால், அந்த ஐந்தாண்டுத் திட்டம், அருமையான சாதனையாக அமைந்தது. அந்தச் சாதனையைக் கண்ட ஹிட்லரும், ஐந்தாண்டுத் திட்டம் தீட்டினான் — ஆலைகளைப் பெருக்கினான்—கழனிகளைக் கதிர் மயமாக்கினான். விளைவு! ஜெர்மனி முழுமையும், ஆலைகள் அதிகமாயின. ஆனால், மக்களின் வாழ்க்கை உயரவில்லை. ஏனெனில், மானும் இருந்தது! புலியும் இருந்தது!! மக்களும் இருந்தார்கள்—மாளிகை மகிபாக்களும் இருந்தார்கள். அதனால் ஹிட்லரின் திட்டங்கள், மக்களின் வாழ்க்கையை உயர்த்தப் பயன்படாமல், குண்டுகளையும் பீரங்கிகளையும் செய்து குவித்தது. புதுவாழ்வு பெற்ற ரஷ்ய மக்களைப் பார்க்கும் ஜெர்மானியரின் கவனத்தைத் திருப்ப, ஹிட்லரின் திட்டம் பயன்பட்டதே அன்றி, களிப்பை உருவாக்க அல்ல! தீ புகுந்த வீடு; அங்கே, தென்றலையும் அனுபவிக்க வேண்டும் என்று எண்ணுவது ஆபத்தான வேலை. அந்த ஆபத்தோடு விளையாடினான் ஹிட்லர்! மாபெரும் போரையும் கொண்டுவந்தான்!! முதலாளித்துவ முறையை வைத்துக்கொண்டு, அதே நேரத்தில் மக்களின் வாழ்வை நிமிர்த்தவும் முயல்வதென்பது, பகற்கனவு. அதனாலேயே கூறுகிறோம்—தங்கக்கூண்டு! கிளி உள்ளே!! என்று.

*

1944-லே அகில இந்திய ஆலையரசர்களான சர். புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸ், டாடா, பிர்லா, சர். அர்தேஷிர்தலால், ஸ்ரீராம் எனும் ஐவர்கூடி இந்தியாவை வளமுள்ளதாக்கவேண்டுமெனும் ஆசையில், திட்டம் ஒன்று போட்டார்கள். பம்பாய்த்திட்டம், என்று அதற்குப் பெயர். 15-ஆண்டுகளில், இந்தியாவை செழிப்புள்ளதாக்கும் நோக்கம்கொண்டது. அந்தத் திட்டம், அதன்படி, 15-ஆண்டுகளில் ரூ. 10,000 கோடி செலவழிப்பதென்றும், கூறப்பட்டிருந்தது. அன்பர் தேஷ்முக், இன்று ஆந்திரத் தலைநகரிலே கூறுகிறார், 'அடுத்த ஐந்து ஆண்டுக்குள் சராசரி இந்தியனுடைய வருமானத்தை இரண்டு மடங்காக்கவேண்டும்' என்று. இதே நோக்கத்தைத்தான், ஆலையரசர்கள் தயாரித்த திட்டமும் கூறியது! முதலில் ஐந்தாண்டு—பிறகு ஓர் ஐந்தாண்டு—மறுபடியும் ஒரு ஐந்தாண்டு என்று பிரித்துத்தான், அவர்களும், தமது திட்டத்தை வெளியிட்டிருந்தனர். வாழ்க்கைத்தரம் உயரவேண்டும்—சுகாதார வசதிகள்வேண்டும்—உணவுற்பத்தி அதிகரிக்கவேண்டும்—மூலப்பொருள்களைத் தேடியெடுக்க வேண்டும்—ஆலைகளை அதிகரிக்க வேண்டும்—என்றுதான் அவர்களும், அத்திட்டத்தில் சொல்லியிருந்தார்கள். ஆனால், அன்று, அந்தத் திட்டத்தைப் பண்டிதர், காரசாரமாகக் கண்டித்தார்! முதலாளிகள் திட்டமென வர்ணித்தார்!! ஆனால், இன்று? அதே திட்டம், தேசிய முத்திரையோடு, சில சாதாரண மாறுதல்களுடன் வந்திருக்கிறது. பம்பாய்த் திட்டப்படி முதல் ஐந்தாண்டில் சுமார் 3000-கோடி செலவழிக்கவேண்டுமெனக் கூறியிருந்தனர். நேரு தீட்டிய ஐந்தாண்டுத்

திட்டமும் சுமார் 2700-கோடி செலவழிக்க வேண்டும் என்பதுதான். ஆலைகளை அமைப்பதும், கால்வாய்களைத் தோண்டுவதும், பாசன அபிவிருத்திகளைச் செய்வதும், மக்களுடைய வருமானத்தை உயர்த்துவதுதான், தமது திட்டத்தின் முதல் நோக்கம் என்று டம்பமாய் ஆலையரசர்கள் தமது திட்டத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். எனினும், அத்திட்டத்தைப்பற்றி பலர், குறை கூறினர்! அந்தக் குறைகளில் முக்கியமான காரணம், "அதுசரி ஐயா! இதெல்லாம் செய்துவிடுகிறோம். பின்னர், நாட்டில் மலைபோல, பொருள்களும் உற்பத்தியாகிக் குவிவதாக வைத்துக்கொள்வோம், அந்த உற்பத்தியை எப்படி வினியோகிப்பது? இதுபற்றி, உங்கள் திட்டத்தில் எதுவும் கூறவில்லையே!" என்பதுதான். பொருள்களை ஒவ்வொரு மனிதருக்கும் கிடைக்கும்படி எப்படி வினியோகிப்பது? இதைப்பற்றி ஆலையரசர்கள் தம்முடைய திட்டத்தில், எதுவும் குறிப்பிடவில்லை. எப்படிக் கூறுவார்கள்? முதலாளித்துவ முறை ஆட்சிசெய்யும் நாடுகளிலே உள்ள முக்கிய தீமையே, பொருள்களை வினியோகம் செய்வதில் இருக்கிற தாரதம்மியம்தான்! இந்த இடைவெளியை வைத்துக்கொண்டு, எவ்வளவு பொருளைக் குவித்தால் என்ன? கழனி, கதிர்மயமாகும்! காய்வான், விவசாயி. ஆலை, ஆடைகளைக் குவிக்கும்—ஆனால் அவை, ஏழையின் அரை உடலைப் போர்த்தப் பயன்படாது. இதற்கென்ன பெயர்? தங்கக் கூண்டுதான்! வர்ணப் பூச்சுதான்!! ஆனால், கிளி, அடைக்கப்பட்டன்றோ கிடக்கிறது.

சென்னை
அழகிரி பள்ளி நிதிக்காக
13-6-54 ஞாயிறு மாலை 6-மணி
வண்ணை
தியாகராய மண்டபத்தில்
சி. என். ஏ. தலைமையில்
மு. கருணாநிதி முன்னிலையில்
"அம்மையப்பன்"
நாடகம்
By
மு. கருணாநிதி
எஸ். எஸ் ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். என் கிருஷ்ணன், எம். ஆர் சுவாமி நாதன், ஜி சகுந்தலா நடிப்பது.
இசை: கஸ்தூரி.
டிக்கட் ரூ 1, 0—8—0
24-வது வட்ட தி மு. க.

*

ஆலைகள் அதிகம் நிரம்பிய நாடு அமெரிக்கா! ஏராளமான செல்வமும் இருக்கிறது! ஆனால், அங்கே சுகம் வாசம் செய்கிறதா? தொழிலாளரின் குமுறல் இல்லாமலிருக்கிறதா? மற்ற எல்லா நாடுகளையும்விட அங்குள்ள சராசரி மனிதனின் தேசிய வருமானம் உயர்ந்துதான் இருக்கிறது. அதனால், அவன் என்ன காண்கிறான்? ஏழைநாட்டு மக்களின் இதயத்தில் என்ன புயல் எழும்புகிறதோ, அப்புயல் அமெரிக்க சராசரி மனிதனுடைய உள்ளத்திலும் எழாமல் இல்லை. என்ன காரணம்? அங்கு உற்பத்தியாகும் பொருள்களை எப்படி வினியோகம் செய்வது என்பதுபற்றிய முறையில் தாரதம்மியம் இருந்துகொண்டிருக்கிறது. ஆலைகள் யாவும், பணக்காரர்கள் வசமுள்ளன. பணக்காரர்களின் நோக்கமெல்லாம், இலாபம்தான்! மக்கள் நலனல்ல! இலாபம் அதிகமாக வரும் எனத் தெரிந்தால், அந்தத் தொழிலில் மூலதனம் போட்டுப் பிரவேசிக்கிறார்கள். ஒருவன் துரை, குல்லாய்த் தொழிலில் இலாபம் வருமெனக் கண்டதும், அந்தத் தொழிலை ஆரம்பிக்கிறார். அவருக்கு அத்தொழில் லாபம் அளிப்பதைக் கண்ட இன்னும் பலரும் அதே குல்லாய்த்தொழிலில் பிரவேசிக்கிறார்கள்—போட்டி ஆரம்பமாகிறது. ஒவ்வொருவரும் தத்தமது தயாரிப்புக்கு 'மார்க்கெட்' தேடவேண்டுமென்று முயற்சிக்கிறார்கள். ஏடுகளில் விளம்பரங்கள்—விதவிதமான முறையில் "குல்லாய் இல்லாத தலையென்ன தலையே!' என்றோர் கம்பெனியும் "ஆளுக்கு ஒரு தலைதான்; ஆனால், ஒரு தலைக்கு ஒரு குல்லாய்தான் இருக்கவேண்டுமென்பதல்ல; நான்கு குல்லாய் இருக்கலாம்"—என்று இன்னொரு கம்பெனியும் போட்டி போட்டுக்கொண்டு விளம்பரம் செய்கிறார்கள். வியாபாரமும் பலமாக இருக்கிறது. சின்னாட்கள் சென்றதும், குல்லாய்க்கு கிராக்கியில்லை! மந்தம் ஏற்படுகிறது!! இப்போது என்ன செய்கிறார்கள் முதலாளிகள்? குல்லாய் தயாரிப்பதைக் குறைக்கிறார்கள். விளைவு, அந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கிடந்த தொழிலாளர்கள், வேலையற்று அலைகிறார்கள்!! இதுபோன்ற சம்பவங்கள்தான், பல நாடுகளில்; நிம்மதியும் சுகவாழ்வும் இருக்கமுடியவில்லை. காரணம், உற்பத்தி செய்வதில் மக்கள் தேவை கவனிக்கப்படுவதில்லை! லாபமே முதலிடம் பெறுகிறது! அதேபோல, வினியோகம் செய்வதிலும், மக்களின் தேவை கவனிக்கப்படுவதில்லை! வருவாயே நோக்கமாகிறது!! இதனால்தான், ஆலையரசர்கள் இந்திய உபகண்டத்துக்கெனத் தீட்டி வழங்கிய திட்டத்தில், வினியோகம்பற்றி எவ்வித குறிப்பும் தரவில்லை. ஆகவே, பலமாகப் பிறரும் கண்டனர். அந்தக் குறை, பண்டிதரின் ஐந்தாண்டுத் திட்டத்திலாவது போக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், அதைப்பற்றிய விளக்கமே இல்லை.

மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டுமென்றால், அவனுக்குத் தேவையான சகல பொருள்களும் கிடைக்கவேண்டும். இந்தப் பொருள்களை, ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம், ஏராளமாக உற்பத்திசெய்து குவித்துவிடலாம். ஆனால் அவ்விதம் குவித்த பொருள்கள், பொதுமக்கள் கைக்குப் போய்ச்சேரும் வண்ணம் வினியோகிப்பதா, மிகவும் முக்கியமான விஷயமாகும். தெளிவாகச் சொன்னால், இந்த வினியோகப் பிரச்னையைத் திருப்திகரமாகத் தீர்த்து வைக்காமல் பண்டங்களை வினியோகிக்க முனைவது நாட்டின் வறுமையைத் தீர்த்து வைப்பதற்குப் பதில், சிக்கலையும் சிருஷ்டித்துவிடலாம். இதனால், சில முதலாளிகளின் பை, நிரம்பலாம். மக்களின் நிலை உயர்ந்துவிடாது!

*

தேசிய வருமானம் உயருமெனச்

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 13—6—54 [ஞாயிறு

'அழகிரி' பந்தலுக்கு வாரீர்!

★

'விருதுநகர்' 'மேட்டுப்பாளையம்' 'லால்குடி', 'தஞ்சை', 'சேலம்' —நடந்துவிட்டது. இப்போது வேலூர் விரும்பி அழைக்கிறது, திராவிடத்தை! வரும் 19, 20 தேதிகளில் நடைபெறவிருக்கும் வடார்க்காடு மாவட்ட மாநாடுகளைக் காண வாரீர் — கண்டு மகிழ வாரீர்!!— என்று அறிவுப் பணிபுரியும் அண்ணாவையும் அழைக்கிறது.

தோழர் ஈழத்து அடிகள் தலைமையில், இரா. நெடுஞ்செழியன் துவக்கிவைக்கும் சீர்திருத்த மாநாட்டினையும்; கே. எம். மதியழகன் தலைமையில் கி. [illegible] துவக்கிவைக்கும் கழக அரசியல் மாநாட்டினையும் கண்டு களிக்க தங்கத் தரணியின் சிங்க இளைஞரையெல்லாம் வேலூர் அழைக்கிறது.

உழைப்பிலே அன்பும், உழைப்பிலே நம்பிக்கையும், எடுத்ததை முடித்துக் காட்டும் பண்பும் நிரம்பிய வடார்க்காடு மாவட்டம், தன்னுடைய வெற்றிப் பட்டியலை நீட்ட விழைகிறது! வருவீர் தோழர்காள் —என்று கொள்கை மணம்கொண்ட தோழர்களையெல்லாம் கூவி அழைக்கிறது.

மாநாடு நடைபெறும் இடம், வேலூர்—பலவிதத்தில் குறிப்பிடத்தக்க ஊர். அங்கே, மாவீரன் அழகிரியின் பெயரால் மாபெரும் பந்தல்! அங்கே, முத்து அரங்கு!! அதிலே இரண்டு நாட்கள், நம்முடைய கொள்கை முரசு ஒலிக்கப்போகிறது. பகலெல்லாம், பேச்சு முழக்கம்! இரு இரவுகளிலும் எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவின் நாடக முழக்கம்!!

•

மாநாடுகள் என்றாலே, மனதிலே ஓர் எழுச்சியும் உற்சாகமும் கூத்தாடுவதுண்டு, நமது தோழர்களுக்கு. திருவிழா! பெருநாள்! இன்பதினம் என்றே எல்லோரும் எண்ணுகின்றனர். நாடு முழுமையுமிருக்கும் நமது கொள்கைக் குன்றுகளைச் சந்திக்கப்போகிறோம் எனும் ஆவல் ஒரு பக்கம்—இதுவரை நாம் ஆற்றிய பணியின் பட்டியலைத் தந்து, பிறரின் பாராட்டுதலைப் பெறவேண்டும் எனும் ஆர்வம் மற்றோர்பக்கம்—மாநாட்டிலே இவ்வளவு மக்களைக் கூட்டினோம் அதனால் எமது மாவட்டத்துக்கு இவ்வளவு 'பலம்' குவிந்தது எனக் காட்டிக்கொள்வதிலே தணியாத வேகம்—இத்தனையும் கலந்ததுதான் நமது மாநாடு.

இதனைக் கூட்டவும், சிறப்புற நடத்தவும், வரவேற்புக் குழுவினர், எத்தனை இரவுகள் தூக்கத்தைத் துரத்தி அடிக்கின்றனரோ! எத்தனைத் தோழர்கள், ஓய்வின்றி, ஓடியாடி அரும்பணியாற்றுகின்றனரோ!! அதையெல்லாம், கூட்டிப் பார்த்தால், நமது மாநாடுகளின் வெற்றியும், அவைகளை நடத்தும் நமது தோழர்களின் செயல் திறமையும் நன்கு புலப்படும் இந்தச் சக்தியை, அடிப்பீடமின்றி ஆள்வோரும், மாற்றுக்கட்சியினரும் மனதிலே நிறுத்த வேண்டும். டாடாவும், பிர்லாவும் ஆதரிப்பதல்ல, நமது கழகம்! பண இயந்திரம் பெற்றதல்ல! பட்டாடோபக்காரர்களை, அருகில் அனுமதிக்காது— பாட்டாளிகள், பாடுபடுவோர், உழைப்பாளர் இனம், உயரிய வாழ்வு விரும்பும் உத்தமர்கள் நிரம்பிய பாசறை. உழைப்பால், வெல்கிறோம்! ஒற்றுமையால், பலகாரியங்களைச் சாதிக்கிறோம், உள்ள உரம், நமது செல்வம். ஆர்வம், நமக்கு வழிகாட்டி. இந்த அருமையான 'செல்வம்' நம்மிடம் இருக்கிற காரணத்தால்தான், எத்தகைய காரியமாயினும் சலிக்காமல், தயங்காமல் செய்து முடிக்கிறோம்.

•

ஆட்சியாளர் அடக்கு முறைகளை மேற்கொண்டபோதெல்லாம், அவர்களுக்கு தக்கதோர் படிப்பினையைத் தர, முன்வந்தமாவட்டம், வடஆர்க்காடு. 'ஆரியமாயைக்கு விதித்த தடையைக் கண்டித்து, நூற்றுக்கு மேற்பட்ட இடங்களிலே தடையை மீறி, தமது உரிமையை நிலைநாட்ட முன் வந்தனர், முன்பு.

அதுபோலவே, ஆச்சாரியாரின் ஆட்சியில் அவருக்கும் அமைச்சர்களுக்கும், கவர்னருக்கும் கருப்புக் கொடி காட்டி, அதிருப்தியைத் தெரிவிக்கும் செயலை, முன்னின்று செய்தது. கழகத்தின் ஆக்க வேலைகளிலும் தயங்கியதில்லை! ஜனநாயக முறையில், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட காலையில், வ. ஆ. மாவட்டத்தின் பல ஊர்களில், அவர்கள் நடத்திய தேர்தல்கள், இன்னும் கவனத்திலிருக்கின்றன

புதுமை எண்ணங்களை உடனுக்குடனும், உற்சாகத்துடனும் நிறைவேற்றும் உத்தமத் தோழர்கள், ஆயிரமாயிரம் உளர். அதனால்தான், இன்று, பல குக்கிராமங்களில்கூட நமது கொடி அசைந்தாடுகிறது! பல பஞ்சாயத்துபோர்டுகள், நம்முடைய கழகத் தோழர்களின், கூடமாக இருந்து வருகின்றன.

காங்கிரஸ் பாசிசத்தை எதிர்த்து ஒழிக்கும் அரும்பணி, அங்கே, வெகுவேகமாக வளர்ந்திருப்பதன் அறிகுறியை கடந்த பொதுத் தேர்தலின்போது அங்கே, கண்டோம். காங்கிரஸ் முறியடிக்கப்பட்டு ஏராளமான எதிர்க்கட்சிக்காரர்கள், அங்கே வெற்றி பெற்றனர்.

இவ்வளவு உணர்ச்சியும் ஆர்வமும் நிரம்பிய அந்த மாவட்டத்திலிருந்துதான் 'மாணிக்கவேலரும்' வந்தார்—மறந்துவிடமுடியாது எவரும். ஆனால், மக்களுக்கு நம்பிக்கையூட்டி, பின் அந்த மக்களைப் பற்றிக் கவலைப்படாதவர்களுக்கு, தன்னுடைய கண்டனத்தையும் வட ஆர்க்காடு காட்டிடத் தவறியதில்லை. மாணிக்கவேலரைத் தேர்ந்தெடுத்தனுப்பிய களம்பூரில்தான் நமது கழகக் காளைகள், உழவர் உரிமைக்காகப் போராடி, ஆளவந்தாரின் சட்ட அம்புக்குமுன் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். அதனால், தனிப்பட்ட 'புள்ளி'களை நம்பிடும் மக்கள் அல்ல அங்கே வாழ்பவர்கள். அட்டகாசத்தை வெறுப்பவர்கள்! துரோகத்தைச் சகியாதவர்

கள்! நல்ல கொள்கையை வளர்ப்பவர்கள்!—அத்தகைய மனவளமும், செயல் திறனும்கொண்ட மாவட்டத்திலேதான், இரண்டாவது முறையாக, நமது மாவட்ட மாநாடு நடைபெறப்போகிறது. அதனைக் காண அனைவரும் வாரீர்! வாரீர்!!—என்று அழைக்கிறோம்.

*

முதல் நாள் நடைபெறும் சமூக சீர்திருத்த மாநாட்டினைத் துவக்கி வைக்கும் தோழர் நெடுஞ்செழியனை, நாடு அறியும். அன்றைய மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் அடிகளையும், சுயமரியாதை உலகு அறியும். இரண்டாவது நாள் அரசியல் மாநாட்டிலே மாணவர் கழகத் தலைவரும், கொங்குநாடு தந்த தோழருமான மதியழகன் தலைமை வகிக்கிறார். மற்றோர் மாணவமணி, நாஞ்சில் மனோகரன் திறந்துவைக்கிறார். வழக்கம்போல, கழகத்தின் முன்னணி வீரர்களும், நடிகச் செல்வர்களும், மாநாட்டில் கலந்து கொள்ளப்போகின்றனர்.

இந்த வெற்றிக் காட்சிகளைக் காண வட ஆர்க்காடு முழுமையும், திரளும்படிச் செய்யவேண்டும்! மாநாடு குறித்து, மாவட்ட முழுமையுமுள்ள 75-க்கு மேற்பட்ட கிளைக் கழகங்களும், ஆங்காங்கே உள்ள மக்களுக்கு அறிவித்து வருகின்றன என அறிகிறோம். நாட்டில், நமது எண்ணங்களைத் தெரிந்துகொள்ளாத மக்கள், ஏராளம் இருக்கிறார்கள். அதனால்தான், அயராது, தளராது, நாள்தோறும் புதுப்புதுக் கழகங்களை நிறுவிவருகிறோம்! அந்த மக்களுடைய மனதிலே விழிப்புணர்ச்சி கொள்ளும்படிச் செய்வதுதான், மாவட்ட மாநாடுகளின், முக்கிய நோக்கமாகும்.

எனவே, மாவட்ட முழுமையுமுள்ள உழவர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், பெண்கள் அனைவரும் அணிவகுத்து வரும்படிச் செய்யவேண்டும். இடையில், ஒரு வாரம். இந்த வேலையை எல்லாக் கிளைக் கழகங்களும் செய்துவிடும் என நம்புகிறோம். அதே நேரத்தில் புது வடிவு பெற்று விளங்கும் வேலூரைக் காண, திராவிடத்து மக்களெல்லாம் திரண்டு வரவேண்டுமென்றும் அழைக்கிறோம். ❀

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

செப்புகிறார், தேஷ்முக்! அதாவது ஒவ்வொரு மனிதனுக்கும் இன்று கிடைக்கும் வருமானத்தைப் போல், இரண்டு மடங்கு கிடைக்குமென்பது அவருடைய எண்ணம். இப்போது, இந்திய மண்ணிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 20 வருகிறதாம்! நாம் கூறவில்லை—சர்க்கார் தமது ஐந்தாண்டுத்திட்ட வெளியீட்டில், குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த சராசரி வருமானக்கணக்கில், மாதா மாதம் லட்சம் லட்சமாகக் குவிக்கும் பணக்காரனும், நாள்தோறும நாலணா சம்பாதிக்கும் ஏழையும் இருக்கிறார்கள். இந்த சராசரி வருமானக் கணக்கின்படி, நகரத்தில் வாழ்வோன் சம்பாதிப்பதற்கும், கிராமத்திலிருப்போன் பெறும் ஊதியத்திற்கும் இடையே வித்யாசமிருக்கிறது!—எனினும் சராசரி கணக்கின்படி ரூ. 255 ஓராண்டுக்கு கிடைப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த சராசரி வருமானம் உயருமென்று கூறுகிறார், தேஷ்முக்! எப்படி? கிராமத்திலிருப்போனுக்கும், நகரத்தில் வாழ்வோனுக்கும், மாளிகைவாசிகளுக்கும் மண்குடிசையினருக்கும். இடையிலே உள்ள "தூரம்" இல்லாமற் செய்யப்படவேண்டும் அப்படிச் செய்தால் தான், ஒவ்வொரு மனிதனுக்கும் நிரந்தரமான வருமானத்தை நிர்ணயிக்க முடியும். அப்படிச் செய்யவேண்டுமேயானால், ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான பொருள்கள் என்ன, அவைகளை அவனுக்கு எப்படி கிடைக்கும்படிச் செய்வது என்கிற வழிவகைகள் செய்யப்பட வேண்டும். இதுதான், சமதர்ம வழி! சாசுவதமான சுகம் தரும் நல்வழி!! இதனை மறந்தல்ல — கூடாது எனும் எண்ணத்துடன்! — தீட்டப்பட்டிருப்பதே, இந்த ஐந்தாண்டுத் திட்டம்.

அதைப்பற்றி விளக்கி வெளியிட்டிருக்கும் சர்க்காரின் ஏட்டில் தெளிவாகக் கூறியிருக்கின்றனர்—"இந்தியாவின் அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்டு இந்தக் காரியங்கள் செய்யப்படும்" என்பதாக. இந்திய அரசியலமைப்பு எது? அறிவோம், நாம் முதலாளித்துவ அமைப்பு மாறக்கூடாது என்று தயாரிக்கப்பட்ட அரசியல் அமைப்பல்லவா அது! அதற்குக் கட்டுப்பட்ட திட்டங்கள் எவ்வண்ணமிருக்கும்?

அதுமட்டுமல்ல, "தனிப்பட்டோர் முதலீடு செய்யலாம்!" "வெளிநாட்டாருக்கு வேண்டிய வசதி செய்து தருகிறோம்" என்றெல்லாம் அடிக்கடி பேசி வருகிறார், பண்டித நேரு. ஜெர்மனிக் கம்பெனியும், ஜப்பான் கம்பெனியும், அமெரிக்கத் துரைமார்களும் போட்டி போட்டுக்கொண்டு முன் வருகிறார்கள், ஆலைகள் பல கட்ட. இதனால் திட்டவட்டமாகத் தெரிகிறது, புள்ளி மானும் துள்ளி விளையாடவேண்டும்! புலியும், நன்றாக உலவ வேண்டும்!!—என்பதே இந்த ஆட்சியின் கொள்கை என்பது. இதனால், எப்படி முதலாளித்துவ முறை சாகும்? நாட்டின் வளம், எல்லோருக்கும் கிடைக்கும்? கூண்டு தங்கமாவதால், கிளிக்கு என்ன பயன்?

•

இத்தகைய திட்டம் தீட்டி வைத்துக் கொண்டிருக்கும் பண்டிதர் குழாம், இதன் மூலம் ஏற்படும் பலாபலன்களைப் பிரமாதமாகக் கூறுகிறார்கள்! வெற்றி பெறுவோம்—என்று விழாமுழக்கம் செய்கிறார்கள்—வருமானம் உயரும் என்று சொல்லுகிறார்கள். ஏழைமகன், வருமானத்தை அல்ல, வாழ்வு உயர வேண்டுமென விரும்புகிறான். வழி என்ன! இதுவா? எண்ணிடவேண்டுகிறோம், தோழர்களே. சமூகத்தின் வளம், தேக்கிவைக்கும் சிறுமதி மறையாமலிருக்கும் போது, எல்லோரும் எப்படி இன்பமடையும். எனினும் சொல்லுகிறார், தேஷ்முக்! முழக்கமிடுகிறார் பண்டிதர்!!

*

சேலத்திலும், தூத்துக்குடியிலும் 'திராவிட நாடு' விற்பனை செய்வதற்குத் தகுந்த முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை. விபரங்கட்கு எழுதவும்.

கண்டனர்! கண்டனர்!!

ஆண்டவனைக் கண்டனர்

எங்கே? எப்போது? யார்?

பாரிஸ்மாநகரில்! விஞ்ஞானிகள்!!

எப்படி?

"பாரிஸ் மாநகரில் விஞ்ஞானிகள், அந்தணர்கள் சொல்லுகின்ற மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே இருந்தால் அந்த மந்திரத்துக்குரிய இறைவனின் வடிவம் எதிரே வருகிறதென்பதை மந்திரத்தை உச்சரித்து ஓர் பதிவு தட்டிலே அதன் வடிவம் விழுவதைக் கண்டனர்"

'ராய்ட்டர்' மூலம், கிடைத்த செய்தி அல்ல! ஆறுமுக நாவலர் என்பார், பெரியகுளத்திலே, ஜூன்-2 ஆற்றிய சொற்பொழிவிலே இந்த உண்மையை வெளியிட்டுள்ளார். சொற்பொழிவின் தலைப்பு 'ஆன்மாக்களும் ஆலய வழிபாடும்' என்பது. அப்போது, இந்தச் செய்தியை அறிவித்திருக்கிறார். ஈஸ்வரனைத் தமிழ் மொழியால் அர்ச்சித்தால் என்ன? — என்று 'குன்றக்குடி' போன்றோர், ஒரு கிளர்ச்சி நடத்தி வருகின்றனராமே! அதற்கே, இத்தகைய பதிலை அளித்திருக்கிறார், ஆறுமுகநாவலர். 'தமிழ் மொழியால் அர்ச்சித்தால் ஆண்டவனைக் காணமுடியாது'— என்று, பாரிஸிலே உள்ள விஞ்ஞானிகள், கண்டுபிடித்துள்ளனராம். இங்கல்ல, பாரிசில்! அதுவும் விஞ்ஞானிகள்!! அந்தணர்கள் சொல்லுகிற மந்திரத்தை உச்சரித்துக்கொண்டேயிருந்தால், அந்த மந்திரத்துக்குரிய இறைவனின் வடிவம், ஒரு தட்டிலே பதிவாகிறதாம் —என்னே. சக்தி, அந்த மந்திரத்துக்கு! அதிலே உள்ள ஆங்காரமும் ஓங்காரமும், இறைவனின் உடலை அடக்கி; வைத்திருக்கின்றனவாம்!! அப்படிப்பட்ட சமஸ்கிருத மந்திரத்தைவிட்டு, தமிழிலா அர்ச்சனை செய்வது? ஆகாது; ஆகாது!!—ஐயனுக்கு ஏற்குமோ?—என்கிறார், ஆறுமுக நாவலர்.

'சொர்க்கம்' என்று சொல்லி பாமரரை ஏய்ப்பதுபோல, 'பாரிஸ் பட்டணம்', இந்த நாவலருக்குப் பயன்படுகிறது, போலும்! பாபம், ஆறுமுகனார் அறியார், பாரிஸுக்கும், உலகிலுள்ள எந்தப்பாகத்துக்கும் சில நிமிடங்களில் தொடர்பேற்படுத்திவிடக் கூடிய காலம் என்பதை. சதா, காமதேனுவைப்பற்றியும், கற்பகவிருட்சத்தைப்பற்றியும், வைகுந்தவாசத்தின் பெருமையைக் குறித்தும், எண்ணிஎண்ணி கற்பனை உலகில் சஞ்சரிப்பதின பலன் போலும், பாபம், இப்படியெல்லாம் பேசியிருக்கிறார்!

•

ஆறுமுக நாவலர் — பெயரே, அவர் ஒரு தமிழன் என்பதைக் காட்டுகிறது—பேசிய இடம், தென்னிந்திய அர்ச்சக சங்கக் கூட்டம். பெரிய குளத்தில், மேற்படி சங்கக் கிளையின் இரண்டாவது ஆண்டு விழா, நடைபெற்றதாம்! அது போது, இவ்வண்ணம், பேசினாராம். ஆண்டவனைப் போற்ற ஆறுமுக நாவலர், சமஸ்கிருதமே தேவை என்று, சண்டப்பிரசண்டம் செய்திருக்கிறார். அதே ஆண்டுவிழாவில், சென்னை தென்னிந்திய அர்ச்சக சங்கத்தின் தலைமை சங்கத் தலைமை சங்கத்தலைவர் பரசுராம குருக்கள் பி. ஏ. பி. எல். அவர்களும் பேசினாராம்—அர்ச்சக சங்கத்தை பலப்படுத்துவதன் அவசியம் குறித்து. பேசியது, ஆங்கிலத்திலாம்! சுதேசமித்திரன், சொல்கிறது!!

அவர், குருக்கள்—பேசியது ஆங்கிலம்—விஷயம், ஆண்டவன் சம்பந்தமானது.

ஆறுமுகநாவலர், ஆயிரம் குட்டிக்கரணம் போட்டாலும், குருக்கள் பதவியைப் பெறமுடியாது— விழாவில்கூட தமிழில்தான் பேசியிருப்பார்—ஆனால், இவர் விரும்புவது, சமஸ்கிருதத்தை!!

இந்த வெட்கக்கேட்டை, எங்கே போய்ச் சொல்வது? எதிரிகளைவிட, நம்மிடமிருக்கும், கோடரிக்காம்புகளே போதும் போலிருக்கிறது, நம்மையும் நமது மொழியையும் அழிக்க!!

ஆண்டவன் தென்படுகிறாராம்— பாரிசிலாம்—விஞ்ஞானிகள் கண்டனராம். சே! சே! சுத்தமோசம்!! சோம்பேறிக் கூட்டம்!!!

போகிற போக்கில்!

[செந்தேள்]

பேரறிஞர் திரு. வி. க இருந்தாரே, அவரது கடைசிக் காலத்தில் ஒரு முறை காணச் சென்றிருந்தேன். பார்த்துவிட்டு, உடனே திரும்பி விடலாம்—என்பது என் திட்டம். ஆனால், அவர் விடவில்லை' தன்னுடைய மனதில் இருப்பதையெல்லாம், என்னிடம் கொட்டினார். நானும், எல்லாவற்றையும், கேட்டுக்கொண்டேன்.

•

வாழ்வின் அஸ்தமன நேரத்திலே குப்பேருக்கு; மனதிலிருப்பதையெல்லாம் கொட்டிவிட வேண்டும், என்பது பொதுவான வியாதி போலும். பாருங்களேன்! இந்த ஆச்சாரியார் 'உடல் நலம்' கெட்டு ஓய்வெடுப்பதாகத்தானே சொன்னார்கள். அவரும் 'எனக்கு ஆபீஸ் இல்லை—டைப் ரைட்டர் இல்லை—ஆகவே யருக்கும் கடிதம் எழுதவும் முடியவில்லை', என்றுதானே அறிக்கை விட்டார். ஆனால், என்ன நடக்கிறது!

*

மக்கள் மத்தியில் உலவிய தலைவர்களுக்கு வயதாகிவிட்டாலும்,

சும்மா இருக்க முடியவில்லை. திரு. வி. க. அரசியல் அலையில் முன்பே ஒதுங்கிக்கொண்டதால், ஓரளவு சகித்துக் கொண்டு விட்டார்! ஆனால், ஆச்சாரியாரால் முடியுமா? ஜே, கோஷம்! பத்திரிகைப் படம்! ஆரவாரம்! 'கலம்' தலைப்பு!—இப்படி அனுதினமும் அனுபவித்தவரல்லவா—அதனால், இப்போது, சும்மாயிருக்க முடியவில்லை!

*

என்ன செய்வது? முன்புபோல யாரும் பிரசங்கத்துக்குக் கூப்பிட மாட்டேன் என்கிறார்கள்! முன்பு அவரை அழைத்து, திறப்பு விழாவும், கல்நாட்டு விழாவும் செய்தோரே இப்போது 'இந்த' காமராஜரைத்தான் அழைக்கிறார்கள்! சகிக்கமுடியுமா? அதனால், தன்னுடைய பெயரும் கவனமும் மக்கள் முன் இருக்கவேண்டுமெனும் ஆசையில் ஏதாவது செய்கிறார்.

*

நம்மவர்கள் செத்தால், 'நம்மையே ஒழிக்கலாமா' எனும் நோக்கத்தில இருக்கும் அவர் ஆச்சாரியசீலரல்லவா! விடுவாரா தனதுடைய இனத்தை!! முடி துறந்து மூலைக்குப் போன பின்னர், இரண்டுமுறை அவர் அறிக்கைகள் விடுத்திருக்கிறார். ஒன்று தொழிற் கல்லூரியில் மாணவர் சேர்ப்பது சம்பந்தமாக! இன்னொன்று, புதிய கல்வித் திட்டத்தை ரத்து செய்ததைக் கண்டித்து!!

இந்த இருகாரியங்களையும் காமராஜர் சர்க்கார் செய்தது, பார்ப்பனரல்லாதாரின் நலனுக்குகந்த காரியம் என்று நாடே சொல்கிறது ஆனால், ஆச்சாரியார் சீறுகிறார்! அவா பட்டுமா? தொழிற்கல்லூரியில மாணவர் சேர்ப்பது பற்றி 'இந்து'வும் தலையங்கம் தீட்டுகிறது. முன்பிருந்த முறைப்படி, நேரில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் 'பல சிபாரிசுகளிருந்தன. இதனால், உடலுறுதியற்ற, உருவமற்ற, எல்லோரும் தொழிற் கல்லூரிகளில் இடம் பிடிக்க முடிந்தது! காமராஜர் உத்திரவு இதைத் தடுக்கிறது!! உடலுறுதியும், போதிய உருவமும், இல்லாத பாரம்பரையல்லவா, ஆச்சாரியாருடையது? அதனால், சீற்றம், வருகிறது!

*

நமது சுப்ரமணியம் — ஆச்சாரியாருக்குமட்டும் 'அனுமார்'—அவர் கூடிய சீக்கிரம், கல்வி இலாகாவை விட்டுவிட்டுப் போகிறாராம்! களிப்புக்குரிய செய்தி என்கிறார்கள், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்!! ❀

புது ஏடுகள்

பூமாலை

'தமிழ்' ஆசிரியர் தில்லை. வில்லாளன் B. A (Hons) "பூமாலை" எனும் மாதம் ஓர் முறைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். முதல் மாலையில், அறிவுலகில் பறித்தெடுக்கப்பட்ட பல மலர்கள் மணம் வீசுகின்றன. முயற்சியில் மட்டுமின்றி முறையிலும் புதுமை, கமழ்கிறது. பல புது எழுத்தாளர்களையும், சந்திக்கிறோம். விலை 8-அணா 'தமிழ்' அச்சகம், சிதம்பரம்.

கேரள முரசு

தோழர் கே. எ. கலையமுதன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு ஒலிக்கக் கிளம்பியிருக்கிறது. முரசின் ஒலி, கேரள மக்களிடையே நம் எண்ணங்களைப் பரப்பிடுவதற்காக எழும்புகின்றது. முயற்சியை வாழ்த்துகிறோம். விலை 2-அணா.

*

S. P. T.

சங்கரன் முன்னேற்ற தனிப் பயிற்சிக் கூடம்

SANKARAN PROGRESSIVE TUTORIALS

கருணாநிதி பார்க், தெப்பக்குளம் P. o. திருச்சி

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி, எஞ்சினீயரிங் பரீட்சைகளுக்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

ஆரம்பம் 9—6—54

மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிப்பதில் திறமையும் அனுபவமும் மிக்க பேராசிரியர்கள் உள்ளனர்.

STAFF

Mr. N. J. தேவதாஸ் M. A.	,, A. பாலசுப்ரமணியம் B. Sc.
Mrs. ஜுடித்லூயிஸ் B. A. (Hons)	Mr. D. A. சாமி (விஷாரத்) வித்வான் சோழகர்
Mr. I. திவ்வியநாதன் B. A. (Hons)	Mr. K. ஜான் B. A.
,, வெங்கட்ராமன் M. A. L. T.	,, லூயிஸ்பீட்டர் B. A.
,, N. பிச்சை B. A. (Hons)	,, R. சுப்ரமணியன் B. A.
,, M. வெங்கட்டராமன் M. A. B. Com.	Mr. C. சாமி B. A.
,, N. S கிருஷ்ணசாமி M. A.	எஞ்சினீயரிங்
,, V. துரைராஜ் B. Sc. B. T.	Mr. M. பாலகிருஷ்ணன் B. E.
,, R. ஜான்சன் B. A. B. T. Dip in geo	,, M. R. நடராசன் B. E.
,, G. ரத்தினம் B. Sc.	,, P. சங்கரன் B. E.

Mrs. ஜுடித்லூயிஸ் B. A. (Hons)
கோவை அரசினர் கல்லூரி முன்னாள் ஆங்கிலப் பேராசிரியர் வைஸ் பிரின்ஸிபால்.

Mr. N. J. தேவதாஸ் M. A.
திருச்சி நகரில தனிப்பயிற்சிக் கூடங்களை நிறுவியவர்களில் முதன்மையானவர்.
பிரின்ஸிபால்

அலுவலகம்
16, நந்திகோவில், தெரு
தெப்பக்குளம் P. o திருச்சி

I. திவ்வியநாதன் B. A. (Hons)
செயலாளர்.

விபரங்களுக்கு நான்கணா ஸ்டாம்புடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்.

செயலாளர், சங்கரன் முன்னேற்ற தனிப்பயிற்சிக் கூடம்
தெப்பக்குளம் P. o. திருச்சி.

'இன்பக் கனவு'

"பெரிய இடமாம், பெரிய இடம்! அலங்காரமான மாளிகையல்ல அய்யா, ஆடம்பரங்கள் நிரம்பிய இடங்களல்ல. உழைத்து வாழ்கிறானே, ஏழைப் பாட்டாளி, அவனுடைய இருதயம்தான் பெரிய இடம்! பயன் காணாது பாடுபட்டு, பார் வாழப் பணிபுரிகிறானே விவசாயி, அவனுடைய களங்கமற்ற உள்ளம்தான், பெரிய இடம்" என்று நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் கூறுகிறபொழுது, மக்கள் மத்தியில் எழுந்த அலைஓசை போன்ற கையொலி இருக்கிறதே, அது, அறிவியக்கத் தோழருடைய உள்ளத்தையெல்லாம் மகிழ்வித்திருக்கும். நண்பர் எம். ஜி. ஆர். நடிகமணிகளிலே, வீரர்—விவேகம் நிரம்பிய தோழர்—இல்லாதோரிடம் கருணை சுரக்கும் இயல்புள்ள அறிவியக்கவாதி. வாள் ஏந்தி, திரைப்பட உலகிலே அவர் வந்துவிட்டாலே, மக்களின் ஆரவாரத்தைக் கேட்கவேண்டாம்! அத்தகையவர், ஏழையாக, கந்தலாடையும் நொந்த உள்ளமும் தாங்கி 'இன்பக் கனவு' நாடகத்திலே, சிந்தை குளிரும் சொற்களைப் பெய்து, நாட்டு மக்களின் நல்லாசியைப் பெற்று வருகிறார்—சில மாதங்களாக.

*

நாடக நடிகர்கள், இன்று, அவிழ்த்துவிடப்பட்ட நெல்லிக்காய் மூட்டையைப்போல, ஆங்காங்கும் சிதறிக் கிடக்கிறார்கள்! அவர்களைப் பற்றி அறிந்த நம்போன்றாருக்கு, வீதியில், விழியில் விசாரத்தோடு நிற்கும் அவர்களைக் காணும்போது உள்ளத்திலே ஏற்படும் உணர்ச்சிப் போராட்டங்கள் ஏராளம். என்ன செய்வது! அவர்கள் குறைகளைச் சுமக்கும் சுமைதாங்கியாக இருக்க முடியுமே தவிர, நாமென்ன, 'கற்பக விருட்சங்'களுமல்ல — மணிமேகலை ஏந்தியிருந்தாளாமே 'அட்சய பாத்திரம்' அது பெற்றவர்களுமல்ல. அதனால், ஆயாசம் அடைவோம், அவர்களைப்போல! இந்த ஆயாசத்தைத் துடைக்கும் நல் உள்ளத்துடன்; அதே நேரத்தில், அந்த நடிகமணிகளின் மூலம் நல்ல கருத்துக்களைப் பரப்பவேண்டும் என்கிற ஆசையுடன், நண்பர் எம். ஜி. ஆர். தனது அண்ணன் எம். ஜி. சக்ரபாணி அவர்களின் ஒத்துழைப்போடு நடிகமன்றம் ஒன்றை நிறுவி, நாடகங்களை நடத்த முன்வந்திருக்கிறார். நற்பணியின் முதல் சித்திரம் 'இன்பக் கனவு'. நாடு முழுமையும் கண்டு ஆனந்தித்துவரும் அந்தக் 'கனவை'க் காணும் வாய்ப்பு, அண்மையில்தான் கிடைத்தது எனக்கு. கடந்த ஞாயிறன்று வேலூரில் தி. மு. க. பொதுச்செயலாளர் தலைமையில் நடைபெற்றபோது, அவர் சொன்னார்; 'நண்பர் ராமச்சந்திரன் அவர்களுக்கும் எனக்கும் இருக்கிற தொடர்பை, நாடு அறியும். அவருடைய நடிப்பையும் நாடகத்தையும் பாராட்டுவது, என்னை நானே பாராட்டிக்கொள்வதாகவே கருதப்படும்" என்பதாக. உண்மைதானே! எம். ஜி ஆர். என்றால், அவர் தாங்கியிருக்கும் கொள்கை எதுவென்பதை நாடு அறியும்—முல்லைக்கு மணம் உண்டென்பதை கூறவா வேண்டும்?

*

கடந்த சில ஆண்டுகளாக, முன்னேற்றக்கொள்கைகளை முரசொலிக்கும் ஆவல், எங்கும் பரவியிருக்கிறது! இதனை, நாடகங்கள் மூலமாகச் செய்யவேண்டும் என்கிற ஆவல், சிறுகிராமங்களில் கூடப்பரவியிருக்கிறது. இந்த வளர்ச்சிக்குயார் காரணமென்பதை, மாற்றாரும், அறிவர். மாற்றாரின் ஏடு, "நாடகக்கலை தமிழ்நாட்டில் இந்த அளவாவது முக்கியத்துவம் பெறச் செய்தது திராவிட இயக்கத்தாருடைய பணி என்றுதான் சொல்லவேண்டும். அதனை அவர்கள் கட்சிப்பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பது வேறுவிஷயம். ஆனால், தங்கள் கொள்கைகளை எடுத்துக் காட்டுவதற்கு நாடகமும் ஒரு சிறந்த சாதனம் என்பதை உணர்த்திய பெருமை, அதன் மூலம் அதிகமான மக்களிடம் தங்கள் கொள்கையைப் பிரசாரம் செய்த பெருமை அவர்களுக்குரியதாகும்" என்று அண்மையில், தீட்டியிருக்கிறது. ஏட்டின் பெயர், 'சோஷியலிஸ்டு' உண்மைதான்! சீன் ஜோடனைகளையும், வெட்டு முழக்கங்களையும், வெள்ளிச்சாமான்களையும், நம்பாமல் — நடிப்பையும், கருத்தையும் முதலீடாகவைத்து, நாம் நாடகக்கலைக்கு பணியாற்றி வருகிறோம். அதனால்தான், நமது நாடகங்கள், மணமுள்ள மலர்களாகவிருக்கின்றன! 'இந்து'வின் ஆதரவும் 'விகடன்' விமர்சனமும், 'கல்கி'யின் படவிளக்கமும், மந்திரிமார்களின் ஒத்துழைப்பும், சச்சிவோத்தமர்களின் ஆதரவுமிருந்தும், 'அந்த வட்டாரத்து' நாடகங்கள், மணம்வீசவில்லை. காரணம், அவைகள் காகிதப் பூக்கள்! நம்முடையவை, கொள்கை மணம் கொண்ட, ரோஜா மலர்கள்! நாம் நாடகம் நடத்துவதை, ஒரு அடிப்படையான கொள்கைக்கு, ஆக்கம் தேடவே செய்கிறோம். உண்மை இது—மறுக்கவில்லை— மறைக்கவும் விரும்பவில்லை. அதனால்தான், நமது நாடகங்களிலே, நமது கொள்கைகள் கோலோச்சுகின்றன! இதனை 'கூடாது' என்போரும், 'கலைவேறு! அரசியல் வேறு!' எனக்கதைப்போரும், காதை மூடிக் கொள்வோரும், துவேஷப் பிரச்சாரம் செய்வோரும், தோள் தட்டுவோரும், இருக்கிறார்கள்—நாட்டில். அவர்களுக்குத் தெண்டனிட்டு, புன்சிரிப்பைப் பெற அல்ல, நாம் இந்தப் பாதை சென்றது! ஆகவே, அவர்களது, எரிச்சலே நமக்கு ஏறு! ஆத்திரமே, ஆனந்தம்!!

'இன்பக்கனவிலே' அந்த நற்பணியைக் காணமுடிகிறது. நடித்தோர் அனைவரும் நம்முடையவர்கள்! எனவே, நறுமணமும், அரும் கொள்கையும் அரசோச்சுகிறது! இந்த அரிய முயற்சியிலே வெற்றி கண்டுவரும் எம். ஜி. ஆர்-ன் தீவிர எண்ணங்கள், இன்னும் பல நாடகங்களாக எழிலுருக்கொண்டு மக்களை மகிழ்விக்கும் என, நம்புகிறோம். 'இன்பக்கனவு' தரும் எல்லோருக்கும் — இசையமைப்பாளர் உட்பட—கண்டுமகிழ்ந்த மக்களைப்போல, நாமும் வாழ்த்துகிறோம். வளர்க, கலை! வாழ்க, நற்பணி!!

[அண்ணல்]

4-ம் பக்கத் தொடர்ச்சி

மாதிரி காலேஜ் படிப்பவனல்ல. நன்றாக வளர்ந்து நின்ற ஆணழகன் அவனுடைய சுருண்ட மயிர்கள் சீவப்படாமல் கலைந்து கிடந்தன. ஒரு மல்ஜிப்பா போட்டுக்கொண்டிருந்தான். இருந்தாலும் அவன் மார்பின் அகலம், கைகளின் முறுக்கேறிய பலம் எல்லாம் முகத்திலேயே நன்கு தெரிந்தது.

காரை நிறுத்தியதும் பஸ்ஸ்டாப்பிலிருந்து வேகமாக நடந்துவந்து காரில் ஏறினன் அந்த வாலிபன். ஆறுமுகத்திற்கு ஒன்றும் புரியவில்லை.

"யாரப்பா அது" என்று கூட கேட்டிருப்பான்.

ஆனல் அதற்குள் புஷ்பா, "ஹலோ, நல்லமுத்து — முன்னெடியே வந்துட்டிங்களா?" என்று கேட்டுவிட்டாள்.

உடனே ஆறுமுகம் ரோடைப் பார்த்தவண்ணம் திரும்பிவிட்டான் 'நல்லமுத்து' என்ற பெயரைக்கேட்டதுமே ஆறுமுகத்திற்கு ஒருமணி நேரத்திற்கு முன் அதே காரில் நடந்த சம்பாஷணைகள் ஞாபகத்திற்குவந்தன. "அந்தப்பயலே ஒழிச்சாத்தான், நம்ப தேசமே உருப்படும், பாஸ்கர்!" என்று சீனு கூறியது அவன் காதில் மறுபடியும் ஒலித்தது. பயத்தோடு நல்லமுத்துவைப் பார்த்தான்.

"மறுபடியும் கடைத்தெருவுக்கு ஓட்டு, ஆறுமுகம்!" என்ற புஷ்பாவின் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பி, ரோடைப் பார்த்துக் கொண்டு காரை ஓட்ட ஆரம்பித்தான்.

புஷ்பாவின் தோளில்கையைப்போட்டுக் கொண்டு நல்லமுத்து அவன் மேல் சாய்ந்துவிட்டது எல்லாம் அவன் முன்னல் தொங்கிக்கொண்டிருந்த கண்ணுடியில் தெரிந்தது. அந்தத் தெருவைத் திரும்பும் போது ஏற்பட்ட அதிர்ச்சியில்நல்லமுத்துவின் உதடுகள் புஷ்பாவின் கன்னத்தைத் தொட்டு விலகியதை அவன் கவனிக்காமல் இல்லை.

பாஸ்கருக்கு கார் ஓட்டியபோது அவனுக்கு பயத்தால் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது.

இப்போது ஆச்சரியத்தால் அதே நிலைக்கு வந்து கொண்டிருந்தான்.

"அதோ, பழக்கடைகளுக்கு அருகே காரை நிறுத்து, ஆறுமுகம்" என்று புஷ்பாவின் குரல் மறுபடியும் கேட்டது.

ஆறுமுகம் பேசாமல் பழக்கடையருகில் கொண்டு போய் நிறுத்தினன்.

"மிஸ்டர் நல்லமுத்து, இவன்புது டிரைவர், பேர் ஆறுமுகம்!" என்று ஆறுமுகத்தைக் காட்டினள் புஷ்பா. இதைக் கேட்ட ஆறுமுகமும் திரும்பினன்.

"ஓ, அப்படியா! நீ எந்த ஊர்?" என்றான் நல்லமுத்து.

ஆறுமுகத்தை நல்ல முறையிலே அன்பாக விசாரித்த முதல் மனிதன் நல்லமுத்துதான்.

"உத்தமபாளயம், சார்!" என்றான் மகிழ்ச்சியோடு.

"அடப்பாவா, அப்பா பேர்லே இருக்கே அந்தத் தோட்டம்...?" என்றாள் புஷ்பா, ஆச்சரியத்தோடு.

"ஆமாம்மா..." என்று கூறிவிட்டு நல்லமுத்துவைப் பார்த்தான் ஆறுமுகம்.

நல்லமுத்து பேசாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"சரிதான் இங்கேயே நின்னு கொண்டிருந்தால், எப்படி கடையாரு போறது. இந்தா, ஆறுமுகம், இந்த ஐந்து ரூபாய்க்கு ஆப்பிள் ஆரஞ்சு, திராட்சை எல்லாம் வாங்கிவா!" என்றாள்; தன் கைப்பையிலிருந்து ஒரு ஐந்துரூபாய் நோட்டை எடுத்த வண்ணம்.

ஆறுமுகம் நோட்டை வாங்கிக் கொண்டு போய், பழங்களை வாங்கி வந்தான்.

மறுபடியும் கார் புறப்பட்டது.

"அடையாறுக்கு ஓட்டு, ஆறுமுகம்!" என்றாள் சந்தோஷமாகப் புஷ்பா. கூறினலோ அந்தளவு மகிழ்ச்சியோடு புறப்பட்டான், ஆறுமுகம். ஒருமணிநேரத்திற்கு முன்னல் அவனுக்கிருந்த பயமெல்லாம் எங்கோ ஓடிவிட்டது. சாதாரணமாகவே கார் ஓட்டினன்.

அடையாறு பீச்சிலே அந்த நேரத்திலே யாரிருப்பார்கள்? பக்கத்திலே இருந்த மரத்தடியிலே கொண்டுபோய் காரை நிறுத்தினன், ஆறுமுகம்.

கதவைத்திறந்து எழுந்து வெளியில்வந்தான். பின்சீட்டில் நல்லமுத்து அப்படியே புஷ்பாவின் தோளிலே சாய்ந்தவண்ணம் கண்ணை மூடிக்கொண்டிருந்தான். மானேஜர் கூறியது ஞாபகத்திற்கு வந்தது ஆறுமுகத்திற்கு. உடனே மரநிழலில் ஒதுங்க ஆரம்பித்தான்.

இதற்குள் புஷ்பா குரல்கொடுத்தாள். "ஆறுமுகம்! இந்தா இந்த முன் சீட்டிலே இருக்கும் ஜமுக்காளத்தைக் கொண்டுபோய் அந்த மரத்தடியிலே விரி. பழக்கூடையையும் எடுத்துக் கொண்டுபோய் வை"

"சரி, அம்மா" என்று கூறிவிட்டு முன்சீட்டிலே இருந்த ஜமுக்காளத்தை எடுத்துப்போனன்.

மறுபடியும் வந்து பழக்கூடையை எடுத்துக்கொண்டுபோய் வைத்துவிட்டுவந்தான்.

"வைத்துவிட்டேனுங்க........" என்று இழுத்தான்.

"இந்தாங்க..........எழுந்திருங்க வெளியே மரத்தடியிலே. உட்காரலாம்!" என்று கூறி அவன் தலையில் லேசாகத் தட்டினள் புஷ்பா.

நல்லமுத்து அசைந்து கொடுத்தான் "நான் வரவில்லை. இங்கேயே தூங்குகிறேன்" என்று கூறிக்கொண்டே சரிந்து படுக்க ஆரம்பித்தான்.

ஆறுமுகம் வேறுபக்கம் திரும்பிக் கொண்டான்.

"இதெல்லாம் வேண்டாம்— வாங்க போகலாம்!" என்று அவனை எழுப்பியவண்ணம் கார் கதவைத் திறந்தாள் புஷ்பா.

முனுமுனுத்துக் கொண்டே எழுந்தான் நல்லமுத்து.

"இரவு பூராவும் தூக்கமில்லை— உங்கப்பா வேறு மூணுமாச போனஸ் கொடுக்கிறேன் என்று சொல்லிட்டாரு. பசங்கள் மிரள்கிறாங்க. அதிலே இருக்கும் ஆபத்தை விளக்க இராத்திரி பூராவும் ஆயிடுத்து!"

"அப்படியா......! இந்த மாதிரி உடம்பைக்கெடுத்துக்கலாமா. பேசாமல் நான் சொல்வதைக் கேளுங்கோ இன்றைக்கே அப்பாவிடம் போவோம். நீங்க கேட்கிறதையெல்லாம் நான் அவரைச் செய்யச்சொல்கிறேன்!"

"நல்லாயிருக்கே, புஷ்பா. சமாதானமா பேசச் சொல்கிறாய்! உங்கப்பாவா சமாதானத்திற்கு வருவார். சமாதானம் செய்யும் நேரத்திலேகூட என்னைக் கவிழ்க்க தொழிற்சங்கத்தையே உடைத்தெறியப் பார்ப்பார். உனக்கு எத்தனை தடவைச் சொன்னாலும் புரியவில்லை. ஒன்று முதலாளிக் கூட்டம் ஒழியவேண்டும். அல்லது பாட்டாளி வர்க்கம் சக்தற்றதாக்கப்படவேண்டும். இது இரண்டும் நடக்காதவரை இந்த உலகத்திலே சமாதானமே கிடையாது!"

"ஏன் அப்படிக் கூறுகிறீர்கள். அப்பா நல்லவர். எப்படியும் சமாதானம் செய்துவிடலாம்!"

"ரொம்பசரி, இப்ப ஒரு மணி நேரமாவது நிம்மதியாயிருக்கிறேன். அதற்குப் பிறகு அதுவும் கிடைக்காது!".

என்று பேசிக்கொண்டே இருவரும் மரத்தடிக்குப் போனார்கள்.

ஆறுமுகம் உடனே காரில் ஏறி உட்கார்ந்துகொண்டான்.

நல்லமுத்துவைப்பற்றிச் சினுகூறியதற்கும், நேரில் பார்ப்பதற்கும் நேர் எதிரான மாற்றமிருப்பதாகத் தோன்றியது ஆறுமுகத்திற்கு. அவனைப்போல அன்பாக பேசும் பெரியவீட்டுப் பிள்ளைகளை ஆறுமுகம் இதுவரை பார்த்ததேயில்லை.

"இவ்வளவு நல்லவனை சினு ஏன் அப்படிக் கூறினான்?—அதை ஏன் நம் சின்ன முதலாளிகூட ஆமோதித்தார்?" ஆறுமுகத்திற்கு இதற்கு விளக்கம் கிடைக்கவில்லை.

அவர்களுக்குள் என்ன சண்டையோ என்று எண்ணிக் கொண்டிருந்தான் ஆறுமுகம்.

இந்தச்சமயத்திலே "ஆறுமுகம்! ஆறுமுகம்!!" என்று நல்லமுத்துக் கூப்பிடுவது கேட்டுத் திரும்பிப் பார்த்தான்,

நல்லமுத்து கைகாட்டி ஆறுமுகத்தைக் கூப்பிட்டான்.

ஆறுமுகம் எழுந்துபோனான்.

"நீ மாத்திரம் ஏனப்பா அங்கேயே உட்கார்ந்துவிட்டாய்!" வா ....இப்படி, உட்கார்!" என்றான்.

இந்த அழைப்பு ஆறுமுகத்தை அளவுக்குமீறிய ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

பக்கத்திலே ஆப்பிள் ஒன்றை கடித்துக்கொண்டு படுத்திருந்தாள், புஷ்பா.

ஆறுமுகம் திகைத்து நிற்பதைக் கண்டவுடன் 'சும்மா, உட்காருப்பா, ஆறுமுகம்!" என்றாள், அவளும்.

இந்தளவு அன்போடு தன் எஜமானி தன்னோடு பழகுவாள் என்று கனவில்கூட எண்ணவில்லை ஆறுமுகம். அப்படியே அவர்களிருவரையும் பார்த்தவண்ணம் உட்கார்ந்தான்.

நல்லமுத்து பழக்கூடையை எடுத்து அவன் முன்னிலையில் வைத்துச் சாப்பிடச் சொன்னான்.

இந்த மாதிரி பெரிய மனிதர்களிடையே எப்படி ஆறுமுகம் உட்கார்ந்ததேயில்லையோ, அப்படியே இதுவரை இந்த பழவகைகளையும் அவன் சாப்பிட்டதுமில்லை!

திகைப்போடு ஒரு ஆரஞ்சை எடுத்தான்.

நல்லமுத்து விடவில்லை. "இந்தாப்பா, ஆப்பிள் சாப்பிடு!" என்று ஒரு ஆப்பிளை எடுத்துக்கொடுத்தான். கூச்சம், திகைப்பு நன்றி எல்லாம் கலந்த பார்வையோடு ஆப்பிளை வாங்கி சாப்பிட ஆரம்பித்தான், ஆறுமுகம்.

"ஏன், தம்பி நீ உத்தமநாதபுரத்திலேதானே, இருக்கிறே?" என்றான் நல்லமுத்து.

'தம்பியா......" என்று ஆறுமுகம் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். நல்லமுத்துவின் அன்பு அவன் தொண்டையை அடைத்துவிட்டது.

"ஆமாங்க" என்று கூறக்கூட முடியவில்லை. வெறும் தலையை ஆட்டினான்.

"அங்கே சேரியிலே வாழும் உன் சகோதர சகோதரிகளுக்காக என்ன செய்கிறாய்?" என்றான் முத்து அடுத்த கேள்வியாக. அந்தக் கேள்விக்கு என்னபதிலை முத்து எதிர்பார்க்கிறான் என்றே ஆறுமுகத்திற்குப் புரியவில்லை. பேசாமல் அவனைப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

"சும்மா இருந்தால் பயனில்லை, ஆறுமுகம். மண்குடிசையிலிருந்து பெரியமாளிகைக்கு குடியேறி இருக்கும் நீ, புறப்பட்ட இடத்தைமறந்துவிடக்கூடாது! நாமெல்லோரும் சமமாக வாழ்ந்து இன்பமாக உலாவ நாங்கள் போராடுகிறோம், ஆறுமுகம். உன்னைப்போல இருப்பவர்கள் இந்தப்போராட்டத்திலே பங்கு எடுத்துக்கொண்டால்தான் உண்மையான வெற்றியைக் காணமுடியும்!' என்று நல்லமுத்து ஆறுமுகத்தின் தோள்களைத் தட்டிக் கூறினான்.

ஆறுமுகத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. முத்துவைப் பார்த்தபடியே இருந்தான்.

"நீ, படித்திருக்கிறாயா, ஆறுமுகம்?"

"கார்ப்பரேஷன்பள்ளியில் ஐந்தாவதுவரை படிச்சேன், சார்!"

"ஓரளவுக்காவது புத்தகங்களை படிக்க முடியுமா?"

"இல்லைசார்! ஏதாவது கொட்டை எழுத்துக்களில் இருந்தால் படித்துவிடுவேன்; எங்கே, இதுவரை நான் படிக்கவேண்டிய அவசியமே ஏற்படவில்லை!"

"இனிமேல் ஏற்படப்போகிறது. இதோ, நான் சில புத்தகங்கள் தருகிறேன். அவைகளில் படம்கூடப் போட்டு விஷயங்கள் விளக்கப்பட்டிருக்கும். ஓய்வு கிடைக்கும்போது படித்துப்பார்!" என்று கூறிக்கொண்டே புஷ்பாவின் தலைமாட்டில் இருந்த ஜோல்பையை எடுத்து அதிலிருந்த சில புத்தகங்களைக் கொடுத்தான். ஆறுமுகம் நன்றியோடு வாங்கிக்கொண்டான். அந்த நேரத்திலே அப்புத்தகங்களை படிப்போம் என்ற எண்ணம் கிடையாது ஆறுமுகத்திற்கு. ஏதோ, பெரியவீட்டுப்பிள்ளை, படித்தபிள்ளை அன்பாகக்கொடுப்பதை மரியாதையாக வாங்கிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில்தான்பெற்றுக் கொண்

டான் இந்தக் காட்சிகள் நடைபெறும்போது ஆப்பிளைத் தின்ற வண்ணமே படுத்திருந்தாள் புஷ்பா.

ஆறுமுகம் நல்லமுத்துகொடுத்த புரட்சிப் பிரசுரங்களைப் பெற்றுக் கொள்ளும்போது சிரித்துக் கொண்டே பேச ஆரம்பித்தாள், புஷ்பா.

"என்ன சேரிவாழ்வோர் சங்கமா...?" என்றாள்.

"அவர்களும் சங்கம் வைக்க வேண்டியதுதானே!" என்றான் நல்லமுத்து.

"அவசியம்தான் அந்தச்சேரிகள் சாக்கடைமாதிரி அல்லவா இருக்கும். அங்கே போக யாரால் முடியும்?"

"பார்த்தியா, புஷ்பா! பழையபடி உன் மாளிகை எண்ணத்திற்கு ஓடிவிடுகிறாயே. நாம்போய் அவர்களைத் தட்டியெழுப்பாவிட்டால், பின்யார்தான போவார்கள்? நம்மைப் போலுள்ளவர்கள்போய் நாலைந்து ஆறுமுகங்களை தயார் செய்து விட்டால் தான் அந்த அடிமை மக்கள் வாழ்வு துலங்கும்!"

"அது சரி. அதற்கு நல்லமுத்து மாத்திரம் உயிர்விட வேண்டியதில்லையே!"

"அப்படியில்லை. நாம் எல்லோரும் தான் உயிர்விட வேண்டும்."

"ஏதோ சொல்லுங்கள்." என்று கூறிப்புரண்டு எழுந்து நின்றாள்.

"என்ன, புஷ்பா அவசரமா?"

"அவசரமென்றுமில்லை. அப்பாவிற்கு இருதயநோய் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. டாக்டர், அதிகமாக அலட்டிக் கொள்ளக் கூடாது; நல்ல ஓய்வு வேண்டும்; அதிக 'டிரிங்க்' கூடாது!" என்றெல்லாம் கூறுகிறார் அவரோ எதையும் கேட்பதாகத்தெரியவில்லை. இதோடு நீங்கள் ஸ்டிரைக்கை வேறு ஆரம்பித்து விட்டீர்கள் அதைத்தான் இவ்வளவு நேரம் நினைத்துக்கொண்டிருந்தேன் என்னமோ பயமாக இருந்தது. உடனே எழுந்தேன்!"

"சேச்சே! இதுக்கு ஏன பயப்படுகிறே. உங்கப்பா அவர் உடலைக்காப்பாற்றிக் கொள்ளும்வழியை நல்லாத் தெரிந்து வைத்திருப்பார். நீ உட்கார்!" என்றான். புஷ்பா மறுபடியும் உட்கார்ந்தாள்.

"என்னமோ எனக்குவரவர பயம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. அவர் போகிற போக்கும் நீங்க போகிற வழியும்—நடுவில் நானும்—எனக்கு, ஒன்றும் சரியாக நடப்பதாகத் தெரியவில்லை. இதெல்லாம் எங்கே போய் முடியப் போகிறதோ தெரியவில்லை!"

நல்லமுத்து பதில் ஒன்றும் கூறவில்லை. பேசாமல் சாய்ந்துபடுத்துக் கொண்டான்.

இனிமேல், தான் அங்கிருப்பது சரியில்லைஎன்று ஆறுமுகம் எழுந்து வந்து காரில் உட்கார்ந்தான்.

நல்லமுத்துகொடுத்தபிரசுரங்களை புரட்டிப் பார்த்தான்.

ஒவ்வொரு பக்கத்திலும் ஏதாவதொரு படம்போட்டு கீழே ஏதோ எழுதப்பட்டிருந்தது.

ஆறுமுகத்திற்கு ஒன்றும் புரியவில்லை. மூடிவைத்து விட்டு அப்படியே காரில்படுத்துவிட்டான்.

கிட்டத்தட்ட ஒருமணிநேரமாகியிருக்கும். புஷ்பாவும்நல்லமுத்துவும் வந்து ஆறுமுகத்தைத் தட்டி எழுப்பினார்கள்.

எழுந்து காரை ஓட்ட ஆரம்பித்தான். சில நிமிடங்களில் அடையாற்றைத் தாண்டி டவுனில் வந்து கொண்டிருந்தது கார்.

"அப்புறம் உங்களை எப்போ பார்க்கிறது. இந்தமாதிரி ஒரு வாரம் இரண்டு வாரம் பார்க்காமே இருந்தீர்களானால்........" என்று கொஞ்சு மொழிபேச ஆரம்பித்தாள் புஷ்பா.

"பார்த்தியா....., பழையபடி ஆரம்பித்துவிட்டியே. நமக்கு இருக்கும் வேலையிலே நாமிருவரும் சந்திப்பதையா முக்கியமாகக் கருதுவது?" என்றான் நல்லமுத்து.

புஷ்பா தனக்கேற்பட்ட ஏமாற்றத்தை முகத்தில் காண்பித்தாள்.

"என்னமோ, வேலை.........நாம் கொஞ்ச நேரம் நிம்மதியா இருந்தால் தொழிலாளர் வர்க்கமே அழிந்துவிடுமா?"

"பார்க்கலாம்... ....முடிந்தால் இரவு சந்திக்கிறேன்!"

"முடிந்தால் என்ன? நிச்சயமாக வரவேண்டும். இன்றோடு சரியாக மூன்றுமாதமாகிவிட்டது, நீங்கள் வந்து! உங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பேன்!"

"சரி, இரவு பத்து மணி சமாருக்கு, முடிந்தால் வருகிறேன்"

"ஐயோ, இவ்வளவு நாழி கேட்டால்தான, ஐயா மனசு இறங்குது! அதுகூட முடிந்தால்......!" என்று கேலிபேசிக்கொண்டே அவன் கன்னத்தைக் கிள்ளினாள், புஷ்பா.

"அது சரி இப்பொழுது எங்கு போகவேண்டும்?" என்றாள் புஷ்பா.

"இதோ இந்த பஸ் ஸ்டாப்பிலேயே இறங்கிக்கொள்கிறேன்."

"ஏன் அப்படி? நேரா சங்கக் கட்டிடத்திற்கே கொண்டுபோய்விடட்டுமா?"

"அந்த வேலைதான் வேண்டாமென்று எத்தனை தடவைக் கூறியிருக்கிறேன்!"

"அதுசரி. இப்படிஇப்படிப்பயந்தா நாளையும் பின்னும் எப்படி இருப்பிங்க. அப்பொழுதுகூட புஷ்பாவிற்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லை என்று கூறுவீர்களா?" என்று கூறிச் சிரித்தாள், அவள்.

நல்லமுத்துவுக்கும் சிரிப்புவந்துவிட்டது.

"நாளையைப்பற்றி இன்று ஏன் யோசிக்கவேண்டும்?" என்று கூறிவிட்டு ஆறுமுகத்தை நோக்கி "ஆறுமுகம், இந்த பஸ் ஸ்டாப்பில் நிறுத்து" என்றான்.

பக்கத்தில் இருந்த பஸ் ஸ்டாப்பில் கொண்டுபோய் காரை நிறுத்தினான் ஆறுமுகம்.

"சரி, நான் வருகிறேன்., இரவு முடிந்தால் பார்க்கிறேன்!"

"முடிந்தாலென்ன? நேராக கார் ஷெட்டிற்கு வாருங்கள். ஏமாற்றிவிடாதீர்கள், அங்குவந்து அழைத்துப்போகிறேன்!" என்ற ஆவலோடும், ஆசையோடும் கூறினாள்.

"பார்க்கலாம்..........!" என்று கூறியவண்ணம் நல்லமுத்து போய்விட்டான்.

ஆறுமுகம் காரைப் பங்களாவை நோக்கி ஓட்ட ஆரம்பித்தான்.

பங்களாவிற்குள் கார் நுழையும் வரை ஆறுமுகம் புஷ்பாவும் பேசிக் கொள்ளவில்லை.

இருவர் மனதிலும் சிந்திப்பதற்கு ஆயிரமாயிரம் விஷயங்களிருந்தன!

(தொடரும்)

வட ஆர்க்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக

2-வது சமூக சீர்திருத்த அரசியல் மாநாடுகள்

ஜூன் 19, 20 தேதிகளில்

வேலூர் பாரக்ஸ் மைதானத்தில் அமைத்துள்ள

அழகிரி பந்தலில்-முத்து அரங்கில் நடைபெறும்

19—6—54 சனி
சமூக சீர்திருத்த மாநாடு
தலைவர்:
ஈழத்து அடிகள் பி. ஏ.
திறப்பாளர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

20—6—54 ஞாயிறு
அரசியல் மாநாடு
தலைவர்:
கே. ஏ. மதியழகன் பி. ஏ.
திறப்பாளர்:
நாஞ்சில் கி. மனோகரன்

இசை முரசு நாகூர் அனிபா குழுவினரின் இசை விருந்தும்

இரண்டு நாட்களிலும் எஸ். எஸ். இராஜேந்திரன் குழுவினரால்

அம்மையப்பன், சந்திரமோகன்

நாடகங்கள் நடைபெறும்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை, ஈ. வி. கே சம்பத், மு. கருணாநிதி, என். வி. நடராசன், சி. பி. சிற்றரசு, அ. பொன்னம்பலனார், ஆசைத்தம்பி அன்பழகன், அரங்கண்ணல், என். எஸ். இளங்கோ, தில்லை வில்லாளன், ப. உ. சண்முகம், முல்லை-சத்தி, கண்ணதாசன், ஏ. கோவிந்தசாமி M L A. அருண்மொழி பூங்கோதை, சத்தியவாணிமுத்து [illegible] தோழர்கள் கே வி கே சாமி இராசு-தங்கப்பழம், நடராசன், சிவசாமி ரத்தினம்; [illegible] M A B. L., எம். எஸ் ராமசாமி ஏ கே வேலன் ஆகியோரும் [illegible] M L A-க்களும், புரட்சி நடிகர் எம் ஜி ராமச்சந்திரன், நடிப்புப்புலவர் கே. ஆர் ராமசாமி, முதலிய பல இயக்கத் தோழர்களும் கலந்துகொள்வார்கள்.

வ. கு. தலைவர்கள்	செயலாளர்கள்	பொருளாளர்
எம். பி சாரதி எம் சி.	போளூர் சுப்பிரமணியம்	வி எஸ். அரங்கநாதன்
ஏ. எஸ். சி. கிருஷ்ணசாமி	வி. ஆர். ஆதிமூலம்	

தொ. ப. தலைவர்கள்	விளம்பர உதவியினர்	அலுவலகப் பொறுப்பாளர்
அ. கருத்தோவியன், எஸ். குப்புசாமி	சிவானந்தம்	ஆர். இராதாகிருஷ்ணன்.

Edited, Printed & Published by C, N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.